## க/தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம்

## தலாத்துஓயா.

# கலையமுதம்

# கலைவிழா மலர்

**30-06-1991**

(ஞாயிற்றுக்கிழமை)

பிரதம விருந்தினர்:

திருமதி. ரூபா ஸ்ரீயானி பந்துசேன அவர்கள்

(கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

*(பழைய மாணவர் மன்றத்தின் ஆதரவில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# WELCOME

# TRADERS

**126, Mahavidyala Mawatha,**

**COLOMBO - 13**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்.....

நன்றியது மறவாத
    நன்மக்கள் போலே
ஒன்றிப் பயின்ற உயர்
    குணத்தால் ஒருங்கே கூடி
முன்னாள் மாணவர்கள்
    மன்ற மொன்றாக்கி
கலை விழாவும் மலரும்
    தோன்றத் துணை புரிந்த
தன் குணத்தால் தனஞ்
    சேர்த்து மணஞ் சேர்த்த
முன்னாள் மாணவ மன்றத்திற்கே
    மனமுவந்து கலையமுத
மலர்தனைச் சமர்ப்பணமாய்
    வைக்கின்றோம் நாமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வாழ்த்து

ஆத்தி சூடி, இளம்பிறையணிந்து
மோனத் திருக்கு முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல் மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடும் பரம் பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்துவோம்.

- பாரதியார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கீதம்

தலாத்துஓயா நகரிலே ஆய கலைகள் வளர
தூய கலாசாலைதனில் ஓயாதுழைப்போமே.

மலை வளத்தின் மத்தியில்
மழை பொழியும் பூமியில்
கலை வளர்த்துக் காத்திடும்
கலாசாலை வளரவே

(தலா......)

ஒற்றுமையைப் பேணிடும்
உயர்ந்த கலா சாலையில்
கற்றுணர்ந்த யாவையும்
கருத்தில் கொண்டு வாழுவோம்

(தலா......)

நெறிவழியை நடத்துவார்
நேயமுடன் அதிபரும்
அறிவொளியைப் புகட்டுவார்
அன்பு மிக்க ஆசானும்

(தலா......)

கல்வி அறிவு வளர்த்திடும்
கலாசாலை வளரவே
எல்லாம் வல்ல இறைவனை
இணைந்து நின்று பாடுவோம்

(தலா......)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**LOTUS**
**HARDWARE STORES**

Importers
&
General Hardware Merchants.
Agents for:
Lanka Tor Steel.

**314/1, Old Moor Street,**
**COLOMBO - 12.**

T'gams: "LOTUS" T'phone: 541204
Colombo. 436718

*With best compliments from:*

**GOLDEN ENTERPRISES**

Importers of
General Hardware and Sanitaryware
Dealers in
P.V.C. Pipes & Fittings
Floor Tiles & Wall Tiles

**161/3, Messenger Street,**
**COLOMBO - 12.**

Phone: 549664

*With best compliments from:*

**Rainbow Traders**

General Hardware Merchants

**374, Old Moor Street,**
**COLOMBO - 12**

T'phone: 436295

*With best compliments from:*

**Visaka Supplies (Pvt.) Ltd.**

Importers
&
General Hardware Merchants

**430 C, Old Moor Street,**
**COLOMBO - 12.**

T'phone: 27641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசியுரை

வளமார்ந்த கண்டி நகர்க்கருகில் தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம் அமைந்துள்ளது. அதிலே தமிழ்ப் பணியாற்றும் நோக்கில் கலைவிழா மலராகச் 'கலையமுத'ச் சஞ்சிகையை வெளியிடுவது கண்டு மகிழ்வடைகின்றேன்.

இலக்கியம் ஒரு சமுதாய வளர்ச்சியினைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. இந் நோக்கில் வித்தியாலய மாணவ சமுதாயத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் இம் மலரின் மணம் எங்கும் வீச வேண்டும். திக்கெட்டும் புகழ் பரப்பித் திகழ்ந்தாய் நீடூழி வாழ்க தமிழ் மகளின் அன்பன் என் ஆசிகள் ஆயிரங்கோடி என நவில்கின்றேன்.

திருமதி. ரூபா ஶ்ரீயாணி பந்துசேன
*(கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)*

★ ★

## கௌரவ அதிதிகள்

திரு. B. M. D. B. பஸ்நாயக்க
உதவி கல்விப் பணிப்பாளர்,
மத்திய மாகாண கல்வித்திணைக்களம் - கண்டி.

ஜனாப். S. A. R. M. பாரூக்,
பிரதம கல்வி அதிகாரி,
மத்திய மாகாண கல்வித் திணைக்களம் - கண்டி.

ஜனாப். M. Y. M. முஸ்லீம்,
பிரதம கல்வி அதிகாரி,
மத்திய மாகாண கல்வித் திணைக்களம் - கண்டி

ஜனாப். J. A. அஸீஸ்,
வட்டாரக் கல்வி அதிகாரி - கண்டி.

திரு. A. தர்மலிங்கம்,
கல்வியதிகாரி / இணைப்பதிகாரி,
சீடா பெருந்தோட்டக் கல்வி அபிவிருத்தித் திட்டம்,
மாகாண கல்விப் பணியகம் - கண்டி.

★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசியுரை....

வளமற்ற சூழலால் தளர் நடை போட்ட தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம் தனது தளிர் நடையாற் தரணி எங்கும் தமிழ் மணம் பரப்பும் கன்னி முயற்சியே கலை அமுதமும், கலை விழாவும், இளைய தலைமுறைக்கு வழிகாட்டி வளமுறச் செய்யவந்த கடந்தகால மாணவரும், பெற்றாரும், ஆசிரியர்களும் கரங்கோத்து வரலாறு படைத்திட்ட இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் கலைப்பணி வளர்க, தொடர்க என வாழ்த்துவதில் பெருமைப்படுகிறேன்.

தங்கமென நன் மாணவரைத் தட்டிப்புடம் போடும் பட்டடை பாட-சாலை என்பதால் இங்கு படைக்கப் பெறும் முத்தமிழ் ஆக்கங்கள் அனைத்தும் தங்கமன்ன மாணவரால் உருவாக்கப்பட்ட ஆபரணங்களாக அணிகளாக அகத்தையும், கரத்தையும் அலங்கரிக்க என் ஆசிகள்.

வாழ்க கலையமுதம்.

வளர்க நம்பணி.

திரு. C. செல்வநாயகம்
*(அதிபர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டாரக் கல்வி அதிகாரியின் ஆசியுரை

கண்டி கல்வித் திணைக்களத்தைச் சார்ந்த தலாத்து ஓயா தமிழ் மகா வித்தியாலயம் கலை விழாவும், விழா மலரும் படைத்து முத்தமிழால் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றும் இவ் வறப்பணியை வளர்க, தொடர்க என வாழ்த்துவதில் பெருமைப் படுகிறேன்.

இன்றைய கால கட்டத்தில் மலையகத்தில் மந்தகதியில் வளர்ச்சியுறும் தமிழன்னைக்கு இவ்வாறான செயற்பாடுகள் புத் தூக்கம் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. எனவே, காலோசிதமான இப்புனிதப் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்தும் ஆசியும் உரித்தாகுக.

ஜே. ஏ. அஸீஸ்
வட்டாரக் கல்வி அதிகாரி,
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம கல்வி அதிகாரியின் ஆசியுரை.........

கலை விழாவுடன் சிறப்புச் சஞ்சிகையும் வெளியிட்டுக் கொண்டாடும் இந் நிகழ்ச்சி மன மகிழ்ச்சியைத் தருகின்றது. மொழியும், இலக்கியமும், பண்பாடும் வளர்வதற்கு இத்தகைய தொண்டுகள் அவசியமானவையே.

இம் முயற்சியில் தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலயம் ஈடுபட்டுச் செயற்படுவது பாராட்டுக்குரியதாகும். சிறு பட்டினத்தில் உள்ள இப்பாடசாலையில் இத்தகைய நிகழ்ச்சியை நடாத்துவது இப்பட்டினத்தை அண்டியுள்ள ஏனைய பாடசாலைகளுக்கு உணர்வையும், உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

கலை விழாவையும், கலைவிழா மலரையும் பொறுப்பேற்று நடாத்தும் அனைவரின் உழைப்பிற்கும் நல்ல பலன் கிட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன். இம் முயற்சியினை எதிர் காலத்திலும் தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்பதே எனது அவா.

எனது இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்.

**எஸ். ஏ. ஆர். எம். பாரூக்**
*பிரதம கல்வி அதிகாரி*
*மத்திய மாகாண கல்வித் திணைக்களம்*
*கண்டி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# ASIATIC COMMERCIAL AGENCY

Agents for
*LANKA TOR STEEL*
*Importers & General Hardware Merchants*

**455, Old Moor Street,**
**Colombo - 12.**

Phone: 437023

*With best compliments from:*

# TRANSMETAL

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS.

*409-A, OLD MOOR STREET,*
*COLOMBO - 12.*

Phone: 435927

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீடா திட்ட இணைப்பதிகாரியின் ஆசியுரை.

தலாத்துஓயாவில் கல்வியிலும், கலைவளத்திலும் தலைத் தோங்கியிருந்த ஒரு தமிழர் சமுதாயம் இருந்த காலம் என் நினைவுக்கு வருகிறது. அன்றைய வாழ்வு இன்று தளர்ச்சி அடைந்திருப்பது காலத்தின் வேதனைக்குரிய நியதியாகும். என்றாலும் ''கால நியதிகளைக் கருத்திற்கொண்டு அதன் மூர்க் கப் போக்கிற்கு அடங்கி ஒரு வாழத்துடிக்கும் சமுதாயத்தின்'' எதிர்காலத்தை பாழடிக்க முடியாது; கால வெளியின் கானல் நீராக்க முடியாது. எப்படியும் நாம் இழந்த வாழ்வை - அதன் பொலிவை - பெருமையை மீண்டும் பெறுதல் வேண்டும். இதற் காக இடைவெளியில்லாத பல முயற்சிகளும், செயற்பாடுகளும் நம்மத்தியில் வேகமாக உருவெடுப்பதோடு, நம்மை நாமே அழித்து வேடிக்கை பார்க்கும் வேதனைக்குரிய தொழிற்பாடு களும், மாறுதல்களை விரும்பாத ''பௌராணிக'' மனப்பாங்கு களும் மாற்றம் பெற வேண்டும்.

இதனைக் கருத்திற் கொண்டு தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒருங்குகூடிச் சமூகத்தினதும் பெற்றோர்களினதும் ஒத்துழைப்புடன் ஒரு கலை விழாவை ஒழுங்குபண்ணியிருப்பதோடு அந்த நன்னாளின் நினைவுப் பதிவாக ஒரு எழுத்து மலரைப் பூக்கச் செய்திருப் பது வரவேற்கக் கூடியது மட்டுமல்ல; முதல் வணக்கத்துக் குரியதுமாகும்.

காலத்தால் கலையிழந்த ஒரு சமுதாயம் எண்ணத் தூய்மை மிக்க இவர்களின் புதிய வண்ணத்தாலும் இலட்சியமுள்ள கைத்திறனாலும் வடிவமைக்கப்படப் போகின்றது. இது தமி ழர் கலைக்குத் தனிப் பெருமை தரும் ''இராஜராஜேஸ்வரமா கட்டும்.'' இறைவனிடம் இதுவே என் இதய வேண்டுதல்.

ஏ. தர்மலிங்கம்
கல்வியதிகாரி / இணைப்பதிகாரி
சீடா பெருந்தோட்ட கல்வி அபிவிருத்தித்திட்டம்
மாகாண கல்விப் பணியகம் - கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

✚

✚

# KOTAHENA PHARMMACY

DISPENSING CHEMISTS, DRUGGISTS & GROCERS

**No. 79, Bonjean Road,**
**Colombo - 13**

T'phone: 432022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாசிரியர்களின்

# சிந்தனைகளில்..........

மலையகத்தின் நறுந்திலகமென ஒளிரும் கண்டி மாநகரின் அண்மையிலே அமைந்து காணப்படும் தலாத்துஓயா எனும் நகரில் தமிழர் வாழ்பதியில் தலாத்துஓயா தமிழ் மகா வித்தியாலய முன்னாள் மாணவ குழாம் குறை களைந்து குணம் நாடி ஒன்றுபட்டு, முன்னின்று முயற்சியுடன் அயராது கலை விழாவினையும் அதன் பொருட்டு மலரொன்றையும் வெளியிட்டு பெருமை சேர்த்தமைக்கு எமது பாராட்டுக்கள்.

காலத்திற்கேற்ற நடைபயிலும் தமிழன்னையின் ஆரமென மிளிரும், அழகிய செந்தமிழ் மலரொன்று பூத்து அதனைச் சகலகலாவல்ல நாமகளுக்கும் தமிழன்னைக்கும் பூணும் பணிகள் எனத் திருப்தி கொள்வோம்.

வளர்பிறையென வளர்ந்து பின் ஸ்தம்பித்துவிட்ட நிலையில், இன்று காணப்படும் வசதிகளற்ற சூழ்நிலையில் பல பற்றாக் குறைகளுக்கு மத்தியில் கல்வியிற் கண்ட இன்ப சுகமாக இக் 'கலையமுதம்' வெளிவருகின்றது. ஆதலால் முன்னாள் மாணவர் இவ் வெள்ளோட்ட முயற்சிக்கு நல்கிய பேராதரவு இளைய தலைமுறைக்கு வழிகாட்டும் வரப்பிரசாதமாய் அமையும். நலன் பல புரிந்து பலன் பல விளைத்துத் தரணியில் புகழோங்க இம் மன்றம் சந்தமும் நிலைக்க எமது ஆசிகள்.

''ஒன்று பட்டால் உண்டு வாழ்வே - நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த
ஞானம் வந்தாற் பின் நமக்கேது வேண்டும்.''

பொறுப்பாசிரியர்கள் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# SAMPATH STEEL

IMPORTERS - GENERAL HARDWARE MERCHANTS.

*297, OLD MOOR STREET,*
*COLOMBO - 12.*

Phone: 540964

*With best compliments from:*

TRANSTEEL MERCHANTS

General Hardware Merchants & Importers

**325, Old Moor Street,**
**COLOMBO - 12**

T'phone: 440951

*With best compliments from:*

**Shiva Brothers (Pvt) Ltd.**

Importers &
General Hardware Merchants.
Dealers in
Ceylon Steel Corporation Products
Etc. Etc.

**327, Old Moor Street,**
**COLOMBO - 12.**

T'phone: 447914

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் உள்ளத்தில் இருந்து
## சில வார்த்தைகள்

எமது நெஞ்சில் புரண்டு நாவில் நர்த்தனமாடும் நயம்மிகு தமிழைக் கையில் கொண்டு எமது அயரா முயற்சியின் ஆற்றல் மிகு ஆர்வத்தின் சாட்சியாய் ஏகலைத்துவத்துடன் எளிமையாய் மேடையேற்றுவதற்கு முன் வந்துள்ளோம் என மன்றத்தின் அறிக்கையை மன்றத்தின் குழுச் செயலாளர் என்ற பொறுப்புடன் உங்கள் முன் எடுத்துரைக்கிறேன்.

தமது பொன்னான நேரத்தையும் பாராது பல அதிமுக்கிய சேவைகளுக்கு மத்தியில் எமது இக்கலை விழாவிற்கு சமூகம் தர உறுதியளித்த மாண்புமிகு திருமதி. ரூபா ஸ்ரீயானி பந்துசேன அவர்களுக்கு எமது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் எமது கலைவிழா சிறப்பாக நடந்தேற சகலதுறைகளிலும் உதவிய அதிபருக்கும் பசி நோக்காது கண் துஞ்சாது எமக்கு ஊக்கம் அளித்த ஆசிரியர்களுக்கும், எமக்கு சகல துறைகளிலும் உதவியளித்த வியாபார, தொழில் அதிபர் ஆகியோருக்கும் எமது நன்றிகள் பல உரித்தாகட்டும்.

தங்களின் ஆக்கங்கள் மேடையில் வந்து விட்டதே என்று கண்டு களிமனம் கொள்கின்ற பால் மனங்களின் உள்ளத்துணர்வுகளை எண்ணிப்பார்க்க வேண்டும், அத்துடன் எமது ஆக்கமும் வரவேண்டும் என்று துடித்து புதிய படைப்புகளில் இறங்க முயலும் இளம் உள்ளங்கள் எத்தனையோ!

யானைக்கும் அடி சறுக்கும் என்பார்கள், ஆனால் யானைகள் அல்ல மாணவர்கள். இவர்களின் படைப்புகளில் குறை பொறுத்து நிறை காண வேண்டுகிறேன்.

இறுதியாகவும் நிறைவாகவும் கருவாக எம்முன்னே பிரசவித்த எண்ணங்களுக்கு உயிரூட்டி அவற்றை உருவாக்க உதவிய எம்மன்ற *1990, 1991* ஆம் ஆண்டிற்கான செயற்குழு உறுப்பினர்களை நினைவுகூற நான் கடமைப்பட்டுள்ளேன். தலைவர் *P.* விஜயகுமார் உப தலைவர் *V* பாலகுமார் பொருளாளர் *P* சிவகுமார் உப பொருளாளர் *S.* மனோரஞ்சனி ஆகியவர்களுக்கும் தமிழ் இலக்கிய மன்ற சார்பில் ஆழமான உணர்வு பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழுக்கு விழா எடுக்கும் இன்று வருகை தந்து விழாவினை சிறப்பூட்டும் அனைவரையும் வருக, வருக என்று இரு கரம் கூப்பி பெருமகிழ்வுடன் வரவேற்கிறேன்.

வாழ்க தமிழ் மொழி!
வளர்க கலை அமுதம்!!

**P. புவனேந்திரகுமார்**
குழுச்செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**S. M. TRADERS**

*No. 69, Main Street,*
*TALATUOYA.*

*With best compliments from:*

**M. Jaganathan**

No. 58, Main Street,
**TALATUOYA.**

*With best compliments from:*

**TILAKARATNA STORES**

**No. 40, Main Street,**
**TALATUOYA.**

*With best compliments from:*

**Sri**
**Murugan Stores**

No. 36, Main Street,
TALATUOYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக் குழு தலைவர், செயளாளர்
# உள்ளத்திலிருந்து

மனிதனை மனிதனாக வாழ வைப்பது அறிவு ஒன்றே. தான் விரும்புகின்றவற்றை வளர்ச்சியுறச் செய்வதும் இவ்வறிவு முத்தே. இதனையே

''எவ்வது துறைவது உலகம், உலகத்தோடு
அவ்வது றைவது அறிவு''
என்ருன் வள்ளுவன்

மாணவனின் உடல் உள வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கும் ஆசிரியர்களை

'' கலக்கமுற நெஞ்சை கலக்கி திரும்பத் துலக்குபவன் நீயலையோ சொல்வாய் பராபரமே ''

என்பதற்கிணங்க ஓயாது மாணவரை ஒழுங்கு படுத்தி வரும் ஆசிரியப் பெருமக்களுக்கு என்றென்றும் கடமைபட்டுள்ளோம். மாணவனின் கல்வி வளர்ச்சியிலேயே எமது பாடசாலை முன்னேற்றம் தங்கியுள்ளது. எனவே மாணவ மணிகள் கசடறக் கற்று மின்னும் தாரகைகளாக வேண்டும்.

எமது அன்பான வேண்டுகோளை ஏற்று வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்குரிய திருமதி. ரூபா ஸ்ரீயானி பந்துசேன (பிரதம அதிதி) அவர்களுக்கும், கௌரவ விருந்தினர்களுக்கும் பெரியோர்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஏனையோருக்கும் பழை மாணவர்கள் சார்பில் எனது பணிவன்பான வந்தனங்கள்.

நன்றி

செல்வன். P. விஜயகுமார்
(விழாக்குழு தலைவர்)

செல்வன்: P. புவனேந்திரகுமார்
(விழாக்குழு செயளாளர்)

*With best compliments from:*

# *New Central Hardwares*

NCH

*HARDWARE MERCHANT AND*

*ESTATE SUPPLIERS*

Tel: 08-23242
08-22359

**39, Colombo Street,**
**KANDY.**

**P. Ravindran**
220/1, Peradeniya Road,
KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லாறு வரலாறு

-சித்தார்த்தன்

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர்

"சிலோன்"
கண்டியைச் சேர்ந்த
கல்லாறு போஸ்டு
மகா ஸ்ரீ மேல்பார்த்து

இவர் கைவசம் கொடுப்பது" என இன்றைய தலாத்துஓயாவில் ஒரு சிறிய இடத்தில் அமைந்த அஞ்சல் அகத்திற்கு தென்னிந்தியப் பகுதியிலிருந்து இங்கு குடியேறியவர்கட்குத் தபால் முகவரியிட்டுவரும்.

தலாத்துஓயா என்பது கல்லாத்து ஆகியதோ, அன்றி ஆறும் சேர்த்து கல்லாறு ஆகியதோ, அல்லது சுண்ணக்கல் நிறைந்த பகுதியில் வரட்சி கொண்ட நிலத்தில் ஓடும் ஆற்றுடன் கூடிய ஊர் என்பதைக் குறிக்கும் கல்லாறு என்ற காரணப் பெயர் அமைந்ததோ தெரியவில்லை.

இப்பகுதி தொடக்கம் மகாவலி ஊடறுக்கும் பள்ளக்கால், கெங்காலை, திகணையுடன் மடவளை, மாத்தளை நாவல வரை சுண்ணாம்புக் கற்பாறைப் பகுதி எனப் பேரறிஞர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள் மண்ணியல் அமைப்பு ஆய்வாளராகப் (GEOLOGIST) பணிபுரிந்த காலத்தில் தயாரித்த முதலாம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இருபருவக் காற்றுகளையும் தடுக்கும் மலைகளைக் கொண்டிருந்தும் மழை நிழற் சரிவென்பதால் ஏதோ அவ்வப்போது பெய்யும் மழையின் உதவியால் ஆரம்பத்தில் கொக்கோ கோப்பி என்பவற்றையும் பின்னர் மலையாள நாட்டிலிருந்து கொணர்ந்த மிளகுப் பயிரையும் நாட்டிய மக்கள் தமிழகத்து திருச்சி, புதுக்கோட்டை, ஆறுகாடு, சேலம், தஞ்சை மாவட்டங்களிலிருந்து வந்தவர்களாவர். அவர்களுக்கே முன் குறிப்பிட்டவாறு அஞ்சல் வரும். கண்டி என்ற குறிப்பு இல்லாவிடில் மட்டக்களப்பைச் சார்ந்த கல்லாறு சென்று "TRY KANDY" என்ற குறிப்புடன் இங்கு தலாத்துஓயாவை நாடி வரும்.

வேளாளர், முக்குலத்தார், முத்தரையர் என்ற பல இனத்தவர்களும் அங்குமிங்குமாகச் சிறு தோட்டங்களில் வேலை செய்ய அவர்களுக்கே இவ்வஞ்சல்கள் வரும். தலாத்துஓயாவிற்குச் சில கல் தொலைவுள்ள மலையகத் தேயிலைத் தோட்டங்களான பவ்லான, கிடுமுட்டி என்ற கிரிமெட்டிய நாளியா வத்தை என்ற பெல்வுட், அம்பலமணி என வழங்கிய அம்பலமான, மொரகொல்லை போன்றவற்றில் பணிபுரிந்த கங்காணிமார், கணக்கப்பிள்ளைகள் தங்கள் சேமிப்புகளில் விலைக்கு வாங்கிய நிலங்களில் பயிர் செய்து வந்தனர். கோபாலசாமி ராஜப்பிரியர், முருகன் கங்காணியார், சாத்தப்பன் கங்காணியார், நாராயணன் கங்காணியார், பெருமாள் கணக்கப்பிள்ளை, நாச்சியப்ப உடையார், சிதம்பரம் செட்டியார், திருமலை செட்டியார் என்போர் இதன் முன்னோடிகளாவர்.

அங்குமிங்குமாகக் குடியேறி வாழ்ந்த இவர்கள் சமயபுரத்து மாரியம்மாளையும், குன்னக்குடி குமரனையும், திருவரங்கப் பெருமானையும், திருவேங்கடவனையும் மறவாது விழா எடுப்பார்கள். நோன்பு நோற்று விருந்துகள் நடாத்தி அனைவரும் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடும் வாய்ப்பினை அமைத்தார்கள். ராஜப்பிரியர் நடாத்திய மாடுவிரட்டு நிகழ்ச்சியாம் ஜல்லிக்கட்டும் திருமலை ரெட்டியாரின் புரட்டாசி விரத முடிவு விருந்துகளும் குறிப்பிடக் கூடியன.

இவை தவிர பௌத்த கோவில் சென்று புத்தபிரானையும் அங்கு அமைந்த விஷ்னுவையும் பத்தினி அம்மானையும் வணங்கி வருவார்கள். கொக்கோ, கோப்பி, மிளகு இவற்றினை வாங்கி வாணிபம் நடாத்திய கீழ்க்கரையைச் சேர்ந்த ஜனாப்கள் முகம்மது யூசுப், மீராப்பிள்ளை போன்றவர்கள் நடத்தும் சந்தூரி பாத்தியா ஓதுகையிலும் கலந்து கொள்வார்கள். இவ்விதமாக இன, மத, மொழி வேறுபாடின்றி உடன் பிறப்புப்போலப் பழகி வந்தனர். சாத்தப்பன் கங்காணியார் குமரன் கோயிலையும். பௌத்த கோயில் கட்ட இடத்தையும் பொருளையும் வழங்கியதையும் உதாரணமாகக் கொள்ளலாம்.

அன்றைய தலைமுறையினரில் ஒரு சிலரே எழுத்து வாசனை கண்டவர்கள். ஏனையோர் செவிப்புலன் வழி அறிவு பெற்று வாய்வழி அறிவுறுத்தினர். தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க சுவாமிகள், சித்தர்கள் போன்றவர்களின் வழிபாட்டுப் பாடல்களையும் திருப்புகழையும் மனப்பாடமாகக் கூறுவர். அரை குறை படிப்புடன் அவர்கள் படித்த இலக்கியங்கள் ஆரவள்ளி சூரவள்ளிக்கதை, அல்லி அரசானி மாலை காத்தவராயன் கதை, பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, இராமாயணம், பாரதம் போன்றனவாகும்.

இங்ஙனம் வாழ்ந்தவர்கள் தங்கள் குடும்பத்தினரை அக்கரையிலேயே விட்டு வந்தனர். ஓரிரு தலை முறைக்குப் பின் குடும்பத்தினரை அழைத்து வந்தபோது உள்ளூரில் கல்வி கற்கும் வாய்ப்பிருக்கவில்லை.

அக்காலகட்டத்தில் நிக்கதன்னையில் ராமையா ராஜப்பிரியர். மயில்வாகனம், போன்றவர்களின் முயற்சியால் அன்று இலங்கையில் இந்திய ஏஜண்டாக விளங்கிய திரு, டி. எல். ஆர். சந்திரன் தலைமையில் தற்பொழுதுள்ள பின்னகொல்ல லைனிற்கு முன்னால் தொடக்கப் பள்ளிக்கென அடிக்கல் நாட்டப்பட்டது. எனினும் ஓரிரு தினங்களில் காணிக்கு உரியவர் அடிக்கல்லை அகற்றி முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். அதனால் வசதி அற்றவர்கள் அம்பிட்டியாவில் பெல்ஜிய அரச குடும்பத்தைச் சேர்ந்த துறவியான அருட்தந்தை பெரவாட்ஸ் அவர்கள் அருட் கருணையால் தொடங்கப் பட்ட அம்பிட்டிய கல்லூரிக்குச் சென்று கல்வி பயின்றனர். வசதி படைத்தோர் தம் பிள்ளைகளைக் கண்டியிலுள்ள சென்ற் பால்ஸ், புனித அந்தோனியார் கல்லூரிகட்கு அனுப்பினர்.

அம்பிட்டிய கல்லூரி ''செமினேரி'' என அழைக்கப்பட்டது. காரணம் அதனருகே கீழ்நாட்டுக் கத்தோலிக்கக் குருமார்களின் மிகப் பெரிய பயிற்சிக் கல்லூரியான ''செமினேரி'' இருந்ததால் ஆறுகாமம் தொடங்கி ஆறுகல் தொலைவு வரை கால் நடையாகச் சென்று கல்வி பயின்று திரும்பினர் மாணவர். அக்காலத்தே தலாத்து ஓயாவும் அம்பிட்டியாவும் கோகுலமாகத் திகழ்ந்தன. மாட்டுப்பண்ணை இவர்களின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருந்தது. கண்டியில் பால், தயிர் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். பால் சேகரிப்போர் பால் கேட்டு உரத்துக் குரல் கொடுத்து அழைக்கின்ற வேளையில் அவசர அவசரமாகப் பகலுணவைக் கையில் தாங்கி தென்னம்பாளை, தென்னையோலை கொண்ட சுருந்துகளைப் பிடித்தவர்களாய் கொசின்னை ஊடாக குறுக்குப்பாதை வழியே வாழமலை கடந்து வழிநடந்து படிக்கச் சென்றனர். அவ்வாறு பயின்று முன்னேறியவர்களில் பிற்காலத்தே வட்டார சாரண இயக்கத்துணைத் தலைவராகவும் இரத்தோட்டை இந்து உயர்நிலைக் கல்வி நிலயத்தின் அதிபராகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையாற்றிய சிவசாமி என அழைக்கப்பட்ட திரு. எம். சிதம்பரம் குறிப்பிடத் தக்கவராவார்.

அக்கால வேளையில் கல்லூரியற்ற நிலையைப் போக்க ஒரு வாய்ப்பு தோன்றியது தலாத்துஓயா இருமொழிப் பாடசாலை (TALATUOYA BI-LINGUAL SCHOOL) எனச் சிங்களமும் ஆங்கிலமும் கற்பித்த பாடசாலை 1948 ல் திரு. டி. எஸ். சேனநாயக்கா அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த திரு. நுகவெலவினால் மத்திய கல்லூரியாக உயர்த்தப்யட்டது. அவ்வமயம் அரசசபை உருப்பினரும் சுகாதார அமைச்சராகவுமிருந்த திரு. ஜோர்ஜ் ஈ, டி. சில்வா உதவியுடன் திரு. ரெ. கோவிந்தசிவாமி என்பார் தமிழ்மொழி மூலத் தொடக்கப் பள்ளியை அமைக்க வழிகோலினார். பெற்றோர்கள் தளபாடங்கள் கொடுத்துதவ தமிழ்ப் பாடசாலை உதயமானது. திரு. குருசாமி என்பவரும் அவரது துணைவியாரும் ஆசிரியர்களாக அமைந்தனர். திரு. வீரகோண், திரு. நாராயணசாமி போன்றோர் நிலமும் கட்டடமும் வழங்க, பள்ளி வகுப்புகளும் விரிவடைந்தன. திருமலை இராமலிங்க ரெட்டியார் காலஞ் சென்ற தனது மகனின் நிணைவாகக் கல்லூரியின் நூல் நிலையத்தைப் பல சங்க நூற்களைக் கொண்ட பெருந் தொகுப்பை அலமாரியுடன் அன்பளிப்புச் செய்து விருத்தி செய்தார்.

எனினும் பல்வேறு உந்துதலால் 1965 ஜனவரியில் கிறிஸ்தவ மிஷன் ஒன்றிற்குச் சொந்தமான காணிக்குப் பாடசாலை இடம் மாறியது. சுமார் 285 மாணவரும், 9 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். கட்டட வசதியீனம் காரணமாக இருநேரப் பாடசாலையாக இயங்கிய பாடசாலை 1970 ல் புதிய கட்டட மொன்றுடன் ஒரு நேரப் பாடசாலையாக மாற்றம் பெற்றது. மாணவர் தொகை ஐநூறாக உயர்வடைய 1975ல் பாரதியார் மண்டபம் கட்டப்பட்டு மகா வித்தியாலயமாகத் தரமுயர்ந்தது 1980 ல் சரஸ்வதி மண்டபத்திற்கு மத்திய மாகாண இந்து இளைஞர் மன்றத்தினால் கம்பிவலை அடிக்கப்பட்டதுடன் மின் வசதியும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1975 க்குப் பின் மாணவர் நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கிச் சென்றதால் படிப்படியாக வரவு வீழ்ச்சி அடைந்தது. எனினும் பாடசாலையின் அபிவிருத்திக்காக சுவீடன் நாட்டுச் சீடாத்திட்டப்பிரிவு உதவ முன்வந்துள்ளதால் 1991 ம் ஆண்டு பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உடுவளையில் உற்பத்தியாகிய தலாத்துஓயாச் சிற்றாறு குருதெனிய ஊடாக மகாவலி கங்கையுடன் கலந்து இந்து மா கடலில் சங்கமமாவது போல்; தலாத்துஓயா வாசிகள் தாம் பெற்ற கல்வியால் நாட்டின் தீரோட்டத்துடன் கலந்து உலகப் பெருவெளியில் இணைந்து பணிபுரிந்து பரந்த உள்ளத்தைப் பெறுவார்களாக.

—★—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# TORRINO STEELS

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

*39, QUARRY ROAD,*
*COLOMBO - 12.*
SRI LANKA

Phone: 440955, 24698, 423711.

*With Best Compliments From:*

# *Lanka Steel Centre*

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

*316 A, OLD MOOR STREET,*
*COLOMBO - 12.*

*T'phone: 548622*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களாகிய எம்மால் கௌரவிக்க வேண்டியோர்

- மாதா, பிதா, குரு தெய்வம் அவர்களின் மலரடி தினமும் வணங்குதல் செய்வோம்.
- அன்னையும், பிதாவும் கண்கண்ட தெய்வமெனப் போற்று வோம்.
- மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தமெனக் கொள்வோம்
- ஆசிரியர் சொற் கேட்டு, பாடங்கள் கற்று நல்ல வாழ்வு அமைத்துக் கொள்வோம்.
- கடவுளை வணங்கிக் கருணையைப் பெற்று கஷ்டங்கள் நீங்கி வாழ்வோம்.

செல்வி செ. சுபாசினி
ஆண்டு - 4

---

## அன்னையும் பிதாவும்

- அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம் இது ஔவை யார் கூற்று.
- தந்தை சொல் மிக்கதோர் மந்திரமில்லை.
- அன்னையின் அன்புக்கு நிகர் வையகத்தில் ஒன்றுமில்லை.
- தாய், தந்தையின் மனங் கோணாமல் நடந்து அவர்களது பாதமலர்களைப் பணிந்து ஒழுக வேண்டும். அப்போதே நம் வாழ்க்கை சிறப்படையும்.
- தாய் தன் மகன் சான்றோன் எனக் கேள்விப்பட்டதும் அவனைப் பெற்ற பொழுதிலும் பார்க்க மகிழ்ச்சியடை-கிறார். இந்நற்பெயரை நம் தாய்க்குப் பெற்றளிக்க வேண்டும்.
- தனக்கென வாழாதவள் அன்னை எனவே தான் "தாயிற் சிறந்ததோர் கோயில் இல்லை" என்றனர் சான்றோர்.

செல்வி தர்ஷினி அமரேந்திரநாதன்
ஆண்டு - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# VAHINI HARDWARE

GENERAL HARDWARE MERCHANTS
AGENTS FOR PERMOGLAZE PAINT, ANTON P. V. C.
AND ESTATE SUPPLIERS.

**No. 36, Peradeniya Road,**
**Kandy.**

Telephone: 08-23113

*With best compliments from:*

# KALA TRADERS

*24/B, YATINUWARA PATUMAWATHA,*
*KANDY.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்குழு உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| போசகர் | : | அதிபர் C. செல்வநாயகம் |
| தலைவர் | : | செல்வன். P. விஜயகுமார் |
| உப தலைவர் | : | செல்வன். V. ஜெயகுமார் |
| செயலாளர் | : | செல்வன். P. புவனேந்திரகுமார் |
| உப செயலாளர் | : | செல்வன். V. பாலகுமார் |
| பொருளாளர் | : | செல்வன். P. சிவகுமார் |
| உப பொருளாளர் | : | செல்வி. S. மனோரஞ்சனி |
| பத்திராதிபர் | : | செல்வன். V. தனசேகரன் |

## விழாப் பொறுப்பாசிரியர் குழு

1. திருமதி. K. கனகாம்பாள்
2. திரு. R. முணியாண்டி
3. திருமதி. R. கலாவாணி
4. திரு. R. செல்வவிக்னேஸ்வரன்

## பழைய மன்ற உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | : | செல்வன். T. புஸ்பநாதன் |
| உப தலைவர் | : | செல்வி. V. காந்திமதி |
| செயலாளர் | : | செல்வன். V. பாலகுமார் |
| உப செயலாளர் | : | செல்வி. M. செல்வராணி |
| பொருளாளர் | : | செல்வன். S. உதயகுமார் |

## நிர்வாக அங்கத்தவர்கள்

1. செல்வன். V. பாலகுமார்
2. செல்வன். V. செல்வகுமார்
3. திரு. T. அமரேந்திரன்
4. திரு. V. மாரிமுத்து
5. செல்வன். G. விஜயகுமார்
6. செல்வன். M. விஜயகுமார்
7. செல்வன். P விஜயகுமார்
8. செல்வி. S. மனோரஞ்சனி
9. செல்வி. P. சுபத்திரா
10. செல்வி. S. ரேவதி
11. செல்வி. M. பத்மாதேவி
12. செல்வி. P. நாகேஸ்வரி
13. செல்வி. B. மகாலக்சுமி
14. செல்வி. S. சந்திரசேகரி
15. செல்வி. M. பத்மாவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதிதாசன் நூற்றாண்டு விழா

நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் மக்கள் மத்தியிலே பிறந்து தம்மறிவால் தமிழ் மொழியில் நல்ல தமிழ் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதி சேவையாற்றிச் சென்ற பாரதிதாசனுக்கு இவ்வாண்டு நூற்றாண்டு விழா நடைபெறுகின்றது. அவர் கூறிய அறிவுரையை நினைவு கூறுவதன் மூலம் அவரின் நூற்றாண்டு விழாவிற்கு எமது பங்கினை அளித்து மகிழ்வெய்துகின்றோம்.

"விலைபோட்டு வாங்கவா முடியும் - கல்வி
வேளைதோறும் கற்றுவருவதால் படியும்
கடிதாய் இருக்குமிப்போது - கல்வி
கற்றிடக் கற்றிட தெரியும் அப்போது"

பாரதிதாசன்

# இறைவா நீ கண்பாராயோ

சென்ற பல ஆண்டுகளாய்
செங்குருதி வியர்வையாக
உழைத்த பல் கோடியவர்
ஊதியம் பெற்ற போதும்
போதிய உணவில்லை
போர்க்கும் உடையில் குறை
உறைவிடமோ ஓட்டை வீடு
உயர் கல்வி மட்டமே தான்

இவர் உழைப்பால் சிலருக்கு பாயாசம்
இவர் வாழ்வோ வையமதில் பரிதாபம்
வாழும் வழி மாறிப் போயினரா
வழுக்கி விழுந்தனரா - வஞ்சிக்கப்பட்டனரா
ஏற்றமின்றி எதுவித மாற்றமின்றி
ஏங்கி நிற்கும் ஏழையான
இவர் வாழ்வு மலர்ந்திடவே
இறைவா நீ கண் பாராயோ!

செல்வி: சந்திரபிரபா
ஆண்டு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணனும் கிளியும்

—★—

**கண்ணன்:** பச்சை வர்ணக் கிளியே
பஞ்சைப் போல பறந்து வா
கொஞ்சிக் கொஞ்சி உனையே
குறைவிலாது வளர்ப்பேன்

**கிளி :** அய்யோ நான் வர மாட்டேன்
அடாது செய்யும் சிறுவனே நீ
அழகாய் என்னைப் பிடித்து
அடைக்கவோ நீ நினைத்தாய்

**கண்ணன்:** வாழைப்பழம் நான் தருவேன்
வடிவாய் உன்னை வளர்த்திடுவேன்
காலை மாலை ஆனதும் நான்
கதைகள் சொல்லித் தந்திடுவேன்

**கிளி :** பறந்து திரிந்தெங்கும் நான்
பழங்கள் நிறையத் தின்றிடுவேன்
மறந்தும் உன்னிடம் வந்தால்
மாட்டிக் கொள்வேன் கூட்டினுள்

**கண்ணன்:** அருமை கிளியே நீயும் தின்ன
இரை தேடியலைய வேண்டாவே
சற்றும் நீ வாடாமல் நானும்
போற்றியுனை வளர்த்திடுவேன்

**கிளி :** கூட்டினுள் வாழவே விரும்ப
மாட்டேன் சிறுவனே நானும்
சிறையில் வாழும் வாழ்வு
சிறப்பானாலும் எனக்கது வேண்டாமே

**கண்ணன்:** என்னருமைத் தங்கையும் ஆசையுடன்
உன்னை அள்ளிக் கொஞ்சுவாள்
தன்னந்தனி சென்றால் பருந்தும்
உன்னைக் கொத்தித் தின்றிடுமே

**கிளி :** எனக்குப் பிள்ளை இரண்டுண்டு
என்னைத் தேடி கீ கீ என்றிடுமே
உன்னிடமே அகப்படாமல்
உயரத்தில் பறந்திடுவேன்

செல்வி. R. சந்திரகலா
ஆண்டு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from:

Well Wisher

★★★★★★

V. Dhanes

With best compliments from:

★★★★★★

P. Munnainathan

With best compliments from:

★★★★★★

M. Ramanathan
350, D. S. S. Veediya,
KANDY.

With best compliments from:

★★★★★★

P. Sivakumar
No. 52, Main Street,
TALATUOYA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழிக் குஞ்சு

காலைக் கதிரவனும் கடமையுணர்வோடு புறப்பட்டுக்கொண்டிருந்தான். மனோரம்யமான அவ்வேளையிலே! சேவல்கள் காலைக் கதிரோனை வரவேற்பன போல பெருமிதத்தோடு கூவிக்கொண்டிருந்தன. பறவைகள் இனிமையான குரலில்கீச்சிட்டுக் கொண்டிருந்தன. ஆனாலும் யானும் என் சகோதரர்களும் வீட்டினுள்ளிருந்த ஒரு சிறிய கூண்டினுள் அடைப்பட்டுக் கிடந்தோம். வைகறைப் பொழுதிலேயே நித்திரை விட்டெழும்பி இரை தேடத் தவித்துக் கொண்டிருந்தோம். ஆனால் எம்முடைய கியா, கியா இரைச்சல் கேட்டும் எம்மை யாரும் திறந்துவிடவில்லை. சற்று நேரத்தின் பின் எஜமானின் சின்ன மகன் ஓட்டமாக ஓடி வந்து ''ஓங்கள யாரும் திறந்து விடலயா? என்று கொன்னிக் கேட்டபடியே கூட்டின் கதவைத் திறந்தான். எம் சந்தோஷமோ உலகினைவிடப் பெரியதாக இருந்தது. தாயின் ''கொக்கொக்'' குடன் எம் ''கியா கியா'' சத்தமும் சேர்ந்து கொண்டது. நம் இரையை நாமே தேடித்தின்னும் பக்குவத்தை அடைந்து விட்டபடியால் அங்கும், இங்கும் ஓடி ஓடி இரையைத் தேடித் திரிந்தோம். இவ்வாறு ஆவலுடன் உணவைத் தேடித்திரியும் வேளையில் எம் தலைக்கு மேலே ஏதோ விமானம் ஒன்று பறந்து செல்வதைப் போன்று தென்பட்டது. எனக்குப் பயத்தினால் உடம்பு வெட வெடவென்று நடுங்கியது. ஓடவும் முடியவில்லை, பயத்தினால் கண்களை மூடிக் கொண்டு நடப்பது நடக்கட்டும் என்று பேசாமலிருந்தேன். கண்ணிமைக்கும் பொழுதிற்குள் என் முதுகில் ஏதோ கொத்தியது. வலியோடு கண்களைத் திறந்தேன். என்னை ஏதோவொரு கரிய பறவை ஒன்று அந்தரத்தில் தூக்கிக் கொண்டு பறந்தது. கத்தினேன், கதறினேன். யாருக்குமே என் அவலக்குரல் காதிற்கு எட்டவில்லையோ தெரியவில்லை, இதுதான் என் கடைசி நாள் என்றெண்ணி கடவுளை நொந்து கொண்டேன். அருகிலிருந்த மரத்தின் மீது என்னை வைத்து கால்களால் அமர்த்திக்கொண்டு சொண்டால் குதறத் தொடங்கியது. இவ்வேளை எங்கிருந்தோ வந்த கல்லொன்று காகத்தின் மீது படக் காகம் பறந்தது. நானும் கீழே விழுந்தேன். கல்லெறிந்து காகத்தைப் பறக்க விட்ட புண்ணியவான் யாரோ என்று நினைத்தேன். அது யாருமில்லை எம்மைத் திறந்து விட்ட எஜமானின் மகனே என்று கண்டதும் திருப்தி கொண்டேன். என்னைத் தூக்கிக் கொண்டு ஓடோடிச் சென்று மருந்து போட்டு ஆதரவோடு தடவிக் கொடுத்தான். பின்னர் என் தாயுடனும் ஏனைய சகோதரர்களோடும் சேர்த்து விட்டனர். மறுபிறவி எடுத்தது போல் என் தாயின் அரவணைப்பில் திளைத்தேன். சகோதரர்களோடு சேர்ந்திருந்தமை எனக்கு பெரும் ஆனந்தம். இன்று கோழிக்குஞ்சுப் பருவத்திலிருந்து அழகான பேட்டுக்கோழியாகி விட்டேன். செய் நன்றி மறக்காமல் என்னை வளர்த்து, என்னுயிரையும் காப்பாற்றிய அவர்களுக்கு முட்டையிட்டுக் கொடுத்து கடன் தீர்க்கின்றேன். இதுவே இச்செல்லக் கோழிக் குஞ்சின் கதை. பொறுமையுடன் கேட்ட உங்களுக்கு என் மனமார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்,

— நன்றி —

செல்வி. த. காயத்திரிதேவி
ஆண்டு - 6

(யாவும் கற்பனையே)

*With best compliments from:*

## RUBY STEEL COMPANY

Dealers in:
Hardware & Building Materials Etc.
Pioneer Sellers of Lanka Tor Steel

**465, Old Moor Street,**
**COLOMBO - 12.**

Phone: 433855, 438982

*With best compliments from:*

## JUBILEE TRADING COMPANY

**No. 410, Old Moor Street,**
**COLOMBO - 12.**

Phone: 27641, 435230

*With best compliments from:*

**

## COLONIAL HARDWARE STORES

Importers
&
General Hardware Merchants

427, OLD MOOR STREET
COLOMBO - 12.

T'phone: 435414
23167

Tele Fax 431950

*With best compliments from:*

**

## CITY HARDWARE CENTRE

Importers & General Hardware Merchants

413-A, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Telephone: 432293
449247

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்ச்சி நிர

1. குத்துவிளக்கேற்றல்
2. கடவுள் வாழ்த்து
3. தமிழ்த்தாய் வாழ்த்து
4. பாடசாலைக் கீதம்
5. வரவேற்புரை
6. தீபாஞ்சலி நடனம்
7. கும்மி
8. நாடகம் (பழைய மாணவர்கள்)
9. காவடி நடனம்

10. ந
11. ந
12. க
13. ந
14. பி
15. ெ
16. மு
17. ந
18. தே


*With best compliments for "Kalaivila" from:*

# NEW LEE ME

*SPECIALISTS IN PHARMACEUITCALS AND WHOLESALE & RET*

NOMINATED WHOLESALE DEAL

"RECKITT AND COLMAN OF C

*No. 100, - DALADA VEEDIY*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ழ்ச்சி நிரல்

10. நாடகம் (அணை கடந்த வெள்ளம்)
11. நாட்டிய நடனம் (பஸ்மாசுரவதம் – ஆண்டு 9 மாணவிகள்)
12. கண்ணன் நடனம் (கீழ் பிரிவு)
13. நாடகம் (மண் குடிசை - ஆண்டு 11 மாணவர்கள்)
14. பிரதம அதிதியின் சொற்பொழிவு
15. கௌரவ அதிதிகளின் சொற்பொழிவு
16. முன்னாள் மாணவ மன்றச் செயலாளரின் உரை
17. நன்றியுரை
18. தேசியகீதம்


*m:*

# EE MEDICAL

*HOLESALE & RETAIL AGENT FOR DRUGS AND GROCERIES*

WHOLESALE DEALER FOR:-

LMAN OF CEYLON LIMITED"

*ADA VEEDIYA - KANDY.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்கை நன்றே

எங்கள் ஊரில் எல்லோராலும் மதிக்கப்படுபவர் பெருத்த செல்வந்தரான செட்டியார். பணத்தினால் மட்டுமல்ல குணத்தினாலும் மேம்பட்டவர். இவரை நம்பிப் பல குடும்பங்கள் இங்கு வாழ்கின்றன. அதில் ஏழ்மை பொருந்திய என் குடும்பமும் ஒன்று. இந்தச் செட்டியார் வீட்டிலே காவல் வேலை செய்பவர் என் அப்பா. செட்டியார் வீட்டிற்குச் சற்று அண்மையிலேயே என் வீடு அமைந்திருந்தது. மாலை ஆறு மணியிலிருந்து விடியற்காலை ஆறுமணி வரை காவல் வேலை செய்வார் என் அப்பா. மீதமுள்ள நேரங்களில் அவரது தோட்டத்தில் வேலை செய்வார். அம்மா அவர்களுடைய வீட்டில் பாத்திரங்கள் கழுவுதல், துணிகளைத் துவைத்தல், மாவிடித்தல் போன்ற பணிகளைச் செய்வார். இவ்வேலைகளுக்காக இவர்கள் கொடுக்கும் கூலியில் தான் எங்கள் காலமும் கழிகிறது.

செட்டியாரின் ஒரே மகனான இராஜன் என்பவன் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தான். ஆனால் அவனோ படிப்பே ஏறாத முட்டாள். ஏறினால் கார் இறங்கினால் பங்களா என ஏழ்மையைப் புரிந்துகொள்ள முடியாத வாழ்க்கை. நேரத்திற்கோர் உடையும், வண்ண வண்ண விலை உயர்ந்த காலணிகளுமே அணிவது வழக்கம். ஏழைப் பிள்ளைகளோடு தொடர்பே இல்லாது பட்டணத்துப் பள்ளியிலே படித்து வருகின்றான். விடுமுறையில் என்றாவது என்னைக் கண்டால் முகஞ்சுளித்து நீ குளிக்கவில்லையா என்ற கேள்வியையே முதலிற் கேட்பான். அந்தக் கேள்வி எனக்கு ''பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கருடா சௌக்கியமா'' என்று கேட்பது போலிருக்கும். நான் அன்றாடம் குளித்து ஆடைகளைத்தோய்த்து கந்தையானாலும் கசக்கியே உடுப்பேன். என்னை அவனது அவ்வாறான கேள்வி வருத்தினாலும் விரலுக்குத் தக்கதாகவே வீக்கம் இருக்கட்டும் என்று என் மனதை நானே தேற்றிக் கொள்வேன். ஆனால் நான் படித்து எப்படியாவது முன்னேற வேண்டும் என்ற வைராக்கிய உணர்வு என்னுள் புரையோடிப் போயிருந்தது.

ஆண்டுகள் சில உருண்டோடின நானும் படித்து ஒரு தொழில் அதிபரானேன் என்னிடமும் செல்வங் கொழித்தாலும் ஆடம்பரமற்ற வாழ்க்கை வாழ்ந்து வரலானேன். நாட்டில் கொலை கொள்ளை, மலிந்து கலவரங்கள் ஏற்பட்டு செட்டியாரின் வீடும் தீக்கிரையாகி செட்டியார் குடும்பம் நடுத்தெருவில் நின்றது. அவர்களின் நிலைகண்டு ஆதரவு காட்டி புகழிடங் கொடுத்தேன். ஆடம்பரத்தின் சிகரமாய் வாழ்ந்த இராஜனுக்கு என் தொழில் நிலையத்தில் ''பியோன்'' வேலை ஒன்றைக் கொடுத்தேன். படிப்பில் அக்கறை எடுத்துப் படித்து நல்ல பெறுபேறு இருந்திருந்தாலும் உயர்பதவிகள் அஃதாவது குறைந்த பட்சம் ஒரு குமாஸ்தா வேலையாவது போட்டுக் கொடுத்திருக்கலாம். தன் செல்வத்தின் மிடுக்கினால் கல்வியை அலட்சியப்படுத்திய இராஜன் இப்போதுதான் படிக்காததை எண்ணி மிகுந்த மனவேதனையடைந்தான். இப்போதுதான் அவன் உணர்ந்தான் நிலையான செல்வமென்றால் அது கல்வி ஒன்றே என்று

''வெள்ளத்தாலும் அழியாது வெந்தனலாலும் வேகாது
வேந்தராலுங் கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது''

என்ற உண்மையையும் உணர்ந்தான் ஆசிரியரும் அடிக்கடி

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே''

என்று கூறுவதன் அர்த்தமும் இப்போது தான் புரிகின்றதென்றான், கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்பவனைப் போல.

''யாவும் கற்பனையே''

நன்றி!

**செல்வி. வே. ஆனந்தி**
ஆண்டு - 9.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**RYLANDS ENTERPRISE**

(RYLANDS BUILDING)

Main Dealers in Cement

General Hardware Merchants &

Suppliers

316, Old Moor Street,

COLOMBO - 12

T'phone: 449032

கலை விழா சிறப்பாக நடைபெற

எமது வாழ்த்துக்கள்!

**யூசுப் ஸ்டோர்ஸ்**

இல. 33, பிரதான வீதி

தலாத்துஓயா.

*With best compliments from:*

**JANATHA STEELS**

Importers, General Hardware Merchants

20, Quarry Road,

COLOMBO - 12.

Phone: 25807

*With best compliments from:*

**Mahajana Metals**

Importers, Dealers in Plywood

Plywood Doors, Hard Board

&

General Hardware Merchants.

297-A Old Moor Street,

COLOMBO - 12.

Phone: 449669

432516

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைத்துளி

இந்தப் பரந்த நீர்ப்பரப்பாகிய பசுபிக் சமுத்திரத்தில் காணப்படும் சிறு துளி நான். இந் நீலக் கடலில் நானும் நண்பர்களும் இடிபட்டு நசுக்குண்டு சனத் தொகை மிகுதியால் வாழ வழியின்றி தவித்துக் கொண்டிருந்தோம். இந் நெரிசலில் இருந்து விடுபடும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். எங்கள் அபிலாசைகள் நிறைவேறுமா என நாங்கள் நாட்களை எண்ணித் தவித்துக் கொண்டிருந்தோம்.

நாட்கள் நகர்ந்து மாதங்களாயின. திடீரென ஒரு நாள் எம்மிடையே பல மாற்றங்கள் காணப்பட்டன. என்னுடைய நண்பர்கள் சிலர் திடீரென காணாமல் போயினர். எனது எடையானது ஒரு நாள் சிறிது சிறிதாக குறையத் தொடங்கியது. நான் மெல்ல மெல்ல மேலே வந்தேன் கப்பல்களும் படகுகளும் எம்மீது எதுவித கவலையும் இன்றி ஓடிக் கொண்டிருந்தன. திடீரென ஆதவனின் வெப்பம் என் மேல் பட என்னுடைய உடம்பின் நிறை குறைந்து யாருமே காணமுடியாத நுண்ணிய உருப் பெற்று பறக்கத் தொடங்கிவிட்டேன். விண்ணுலகம் சென்றோரில் நானுமொருவன். எனதும் நண்பர்களதும் நீண்ட நாள் கனவு நிறைவேறியதும் மகிழ்ச்சியடைந்தோம். ஆனாலும் பெருந்தொகையான நண்பர்களை விட்டுப் பிரிந்தது ஓரளவு கவலையைத் தந்தது. ஆனால் கனவைப் போல் நீண்ட காலம் இச் சந்தோஷம் நிலைக்கவில்லை. ஒரு நாள் பயங்கர இருள் என்னையும் நண்பர்களையும் சூழ்ந்து ஒருவரை ஒருவர் கண்டு கொள்ள முடியாமற் பிரித்து வைத்தது. அவ்விருளில் நானும் தனியானேன். இதற்குள் திடீரென ஒரு வெளிச்சமும் இடிச் சத்தமும் வானைப் பிளந்தது. இந்நிகழ்ச்சி யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே'' என்பது போல் அடுத்து நடை பெறப் போவதை எனக்கு உணர்த்தியது.

''டட டட்ட டுடும்'' என்ற முழக்கமும் சில் என்ற குளிரும் எங்களுக்கு புரியாத புதிராக இருந்தது. ஆ! மறுபடியும் தரை நோக்கிச் சென்று சமுத்திரத்தில் துளிகளோடு துளிகளாக விழப் போகின்றோமே என்று எண்ணி விண்ணுலகிற்கு எனது நண்பர்களுடன் சேர்ந்து இறுதி அஞ்சலியைச் செலுத்திவோம் ஆனாலும் என்னைப் பொறுத்தவரையில் பிறவி பெற்றதன் பயனை அடைந்தாற் போலிருந்தது. இடி மின்னலில் மோதுண்டு மழையென கொட்டத் தொடங்கினோம். அதன் காரணமாக சமுத்திரா தேவியுடன் சங்கமமானோம். மீண்டும் மீண்டும் இவ்வாறு மாறிமாறி பிறந்து கொண்டும், இறந்து கொண்டும் மண்ணில் மாந்தர்க்காய் வாழ்ந்து கொண்டிருந்தோம். எம்மினத்தார் உயிருள்ள ஜீவராசிகள், தாவரங்கள் அனைவருக்குமே நன்மை செய்பவர்கள், எம்மைப் பார்த்தால் கார்மயிலும் ஆடும், கவியினம் ஓடும், குயிலினம் பாடும் சிறுவர்கள் எம்மைப் பார்த்து

''மழையே மழையே பெய்வாயே
மானிலம் சிறக்கப் பெய்வாயே
உழவர் உள்ளம் மகிழ்ந்திடவே
மழையே மழையே பெய்வாயே''

என்று பாடி மகிழ்ந்தனர். மழைத் துளியைக் காணாத பயிர்கள் அன்னையில்லாக் குழந்தைகள் போல்வர் மழைத்துளியாகிய எனக்கு யாரிடமும் பிரதியுபகாரம் பெறும் நோக்கமில்லை, என்று பெருமையுடன் கூறி சிறு துளியாகிய நான் முற்றுப் பெறுகின்றேன்.

செல்வி. கணேசன் சத்தியதேவி
ஆண்டு - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# S. P. SAMY & SONS

*No 52, Main Street,*
*TALATUOYA.*

*With best compliments from:*

# SRI YOGALUXMY STORES

*27, Main Street,*
*TALATUOYA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிச் சோலை

## அடிமைத்தனத்தை எதிர்த்திடுவோம்

நம் வலி தேய்ந்து மலர்ந்தது - மலையகம்
நாட்டின் வளமது பல சதவீதம்
எம் வலியுணர்ந்து இங்குறுவோம் - எனின்
அடிமை வாழ்வு அலறியோடிடும்.

தலையைச் சொறிந்து வாழ்ந்ததனால் - பலர்
தலையில் ஏறி மிதித்தனரே
பழைய வாழ்வை எண்ணி நாமும் - பாடம்
பலதைக் கற்றிடுவோம்.

பயந்த வாழ்வை வெறுத்திடுவோம் - நாம்
பண்பை என்றும் போற்றிடுவோம்
அன்பாய் வாழப் பழகிடுவோம் - நாம்
அடிமை வாழ்வை ஒழித்திடுவோம்

கற்று கற்று தேர்ந்திடுவோம் - நாம்
கவலை போக்க வழி சமைப்போம்
அழிந்து சாம்பல் ஆகிடினும் - நாம்
அடிமைத்தனத்தை எதிர்த்திடுவோம்.

செல்வி. மஞ்சுளா
ஆண்டு - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவன் நீ! சிந்தனை செய்யடா!

கூன் விழுந்த கிழவன் - தனை
    இண்டிச் சிரிக்கின்றாயே
உன் எதிர் கால தோற்றமதை
    எண்ணி நீ பார்த்ததுண்டா
பழுத் தோலை விழச் சிரிக்கும்
    குருத் தோலை கதை தானே

எதிலும் இண்டல் தானே - நீ
    இடம் பொருள் ஏவலென்று
கற்றதை மறந்தனையோ - இங்கு
    காதற்ற ஊசியாவாய்
இளிப்பிள்ளை வாழ்வு வேண்டாம் - உனக்கு
    இண்டலும் வேண்டாம் வாழ்வில்

சூழலைக் கற்று அறி - உன்
    சுற்றத்தைச் சொல்ல அறி
மாற்றத்தை ஏற்றுக்கொண்டு - உலகில்
    மனிதரை மதித்து நட
பாரினில் மாணவன் நீ - இங்கு
    பலதையும் சிந்தனை செய்யடா!

செல்வி. பெ. சுபத்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது சிந்தனையிலிருந்து...............

புது வருடம் பிறந்தது. புத்தாடையணிந்த புதுத் தமிழ்மகளாய் தமிழன்னையை பூரிக்கச் செய்ய 'கலையமுதம்' என்ற இம் மலர் இன்று எமது வித்தியாலயத்தில் புத்தம் புது மலராய் மலருகின்றது. இன்று மலரும் இம்மலர் என்றும் வாடா மல்லிகையாக வருடாவருடம் மலர்ந்து எட்டுத்திக்கிலும் வாசனை பரப்ப வேண்டுமெனக் கலைமகளைக் கருணையுடன் வேண்டுகின்றேன்.

''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்'' என்றார்

மகாகவி பாரதியார். ''இறந்தாலும் என்னுடல் தமிழ் மணந்து போக வேண்டும்'' என்றார் இன்னொரு தமிழ்ப்பித்தர். ஆன்றோர், சான்றோர், புலவர் யாவரும் புகழ்ந்த மொழி செந் தமிழ்மொழி. ஐம் பெருங் காப்பியங்களும் தமிழன்னைக்கு அழகுமிகு அணிகலன்கள்

''மூன்று குலத்தமிழ் பன்னரும் முதுதமிழ் மூதாட்டியும்
மூண்ட நல்லன்பொடு
நித்தம் வளர்த்த மொழிக்கு நாம் போடும் அனுவளவு
அணிகலன் இக் கலைவிழா மலர்''

இயலும், இசையும், நாடகமும் கொண்ட முத்தமிழ் நாடகத் தமிழ் மிகச் சிறந்தது. கையில் நூலெடுத்து எழுத்துக்களைக் கூட வாசித்தறிய முடியாத பாமரர்களும் பார்த்தறிந்து மகிழும் தன்மையை தன்னகத்தே கொண்டுள்ளது. உடல் வளர்ச்சிக்கு உணவு போல் நமக்கு ஊக்கம் அளிக்கவும், பாடுபட்டு அடைய வேண்டியதை இயற்கையாகவே அமைந்து இன்ப மூட்ட வல்லதாயும் அமைந்துள்ள இத்தகைய சிறந்த கலையானது எமது மனவளர்ச்சிக்கு இன்றியமையாதது.

பரத நாட்டியத்தின் உடல் நெளிவிலும் பாட்டாளியின் உடல் நெளிவிலும் கலையின் பெருமையைக் காணலாம் என்கிறார் அறிஞர் ஒருவர். கலைச்சுவையானது ஓவியம் போன்றது அன்று. சிறந்த நூல்களைவிட இலகுவில் மக்களைக் கவரும் கலைகள் காலங்கள் உருண்டோடி மறைந்தாலும் மக்கள் மனதில் என்றும் உறைகின்றன. ஒரு கலைஞன் பேசுவது நம் அறிவோடு அன்று. மனதில் நாம் தேடாமற் தேடும் அன்பு, அழகு, வியப்பு ஆகிய உணர்வுகளே அது.

மாணவர்கள் எம்மிடையே மறைந்து கிடந்த கலைகளை மாணவ இலக்கிய மன்றம் போன்றவை மூலமாக வளர்த்து வந்து கலைகளின் பெருவிழாவாகக் கொண்டாடப்படும் இக்கலைவிழா சிறப்புடன் நடைபெற வருடாவருடம் 'கலையமுதம்' எழில் பெற்று மலரத் தமிழ் அன்னையின் ஆசியையும், அருளையும் வேண்டி எனது சிந்தனைத் துளிகளைச் சிதறினேன்.

''குன்றிலிட்ட தீபம் போல் தமிழன்னையின்
கலைகள் என்றும் மங்காப் புகழுடன் வளரட்டும்''

**வாழ்க "கலையமுதம்"**

— நன்றி —

**செல்வி. ந. நளினி**
ஆண்டு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# *Talatuoya Wine Stores*

TALATUOYA.

*Head Office:*

## INDRA HOTEL

NO. 575, DIMBULLA ROAD,
HATTON.
T'phone: 0512-320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவமே வாழ்வின் வழிகாட்டி

மண்ணில் பிறந்ததன் பயனைப் பெற வேண்டுமானால் நிலையான புகழுடன் வாழ வேண்டும். பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்று இல்லாமல், இறவாத புகழுடைய இனிய நூல்களை மக்களுக்குத்தந்து நிலையான புகழுடன் என்றும் எம்முடன் வாழும் புலவர்களுள் வள்ளுவரும் ஒருவராவார். இவர் தமிழ் நாட்டில் பிறந்திருந்தாலும் அவரது குறளமுதம் உலகெங்கினும் இனித்த வண்ணம் இருக்கின்றது. உலகில் வளம் பெற்ற அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களிடையே அறம் கூறும் குறள் சிந்தனைகள் வியாபித்திருக்கும் நூலாக காண்கிறோம், இதனால் அன்றோ பாரதியார்

''வள்ளுவன் தன்னை யுலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு''

என்று வள்ளுவனை உலகிற்கு ஈந்த தமிழ் நாட்டைப் போற்றுகின்றார். திருவள்ளுவரின் தாய் பெயர் ஆதி என்றும் தந்தை பெயர் பகவன் என்றும், மனைவி பெயர் வாசுகி என்றும் சொல்கின்றார்கள். வள்ளுவர் இயற்றிய நூலே 'வள்ளுவம்' என அழைக்கப்படும் ' திருக்குறள்'' ஆகும். மூவாயிரத்து முந்நூற்று முப்பது குறள்களே உள்ளன,

இவற்றை முப்பாலாகப் பிரித்து அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால், என அமைத்துள்ளார். ஒவ்வொரு அதிகாரமும் பத்துக் குறள்களைக் கொண்டுள்ளன; வள்ளுவர் திருக்குறள் மூலம் கூறுவது யாதெனில் மனிதன் அறவழியில் நடந்து பொருள் தேடி இன்பமாக வாழவேண்டும் என்பதேயாகும். இதனை ஒழுங்கமைத்தே முப்பாலாகப் பிரித்து எழுதி ஒரு வாழ்க்கை முறையைக் காட்டிச் சென்றுள்ளார். வள்ளுவர் ஒரு சமயத்தவருக்கென்றோ, அல்லது ஒரு சாதியினருக்கென்றோ எழுதியவர் அல்லர். அவர் உலக மக்களனைவருக்கும் பொதுவாக எழுதியுள்ளார்.

அவருடைய கடவுள் கொள்கையை நோக்கும்போது அது ஏற்புடைய கடவுள் கொள்கையாகவே காணப்படுகிறது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒவ்வொரு விடயமாக தெளிவு படுத்திக் காட்டியுள்ளார் இவ்வாறு திருக்குறள் 133 அதிகாரங்களையுடையது. ஒரு விடயத்தைப்பற்றி கூற வந்த வள்ளுவர் முதலில் அவ்விடயம் பற்றியும் பின் அதனால் ஏற்படும் நன்மை, தீமையையும் கூறி கூற வந்த பொருளை வலியுறுத்திக் கூறுகின்றார்.

அறவழியில் வாழ வேண்டுமாயின் கடவுளை வணங்கி, இல்லறத்தில் வாழ்ந்து மக்கட் பேற்றைப்பெற்று விருந்து ஓம்பி வாய்மை காத்து செய் நன்றி கொண்டு வாழ வேண்டுமென்று வலியுறுத்துகின்றார். மற்றும்

''அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்ற அறம்''

பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் என்ற நான்கையும் கடிந்து ஒழுகுவதே அறம் என்று கூறுகின்றார்.

பொருட்பால் மூலம் ஒரு அரசன் எவ்வாறு இருத்தல் வேண்டும் அவன் தனது அரசையும் நாட்டையும் எவ்வாறு காத்துக்கொள்ள வேண்டும், குடிகளிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக''                    என்றும்

''கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்து இரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்''

என்று கல்வியெனும் அதிகாரத்தில் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறும் அதே வேளையில் கல்லாமையைப்பற்றி

''கல்லா தவரும் நனிநல்வர் கற்றார் முன்
சொல்லா திருக்கப் பொறின்''

கல்லாமை எனும் அதிகாரத்தின் வாயிலாக வள்ளுவர் இவ்வாறும் கூறுகின்றார்.

வள்ளுவரின் வாய்மொழி ஒவ்வொன்றும் மக்களால் மறக்க முடியாது. மக்கள் மனதில் நிரந்தரமாய் இடம் பிடித்தவர். அவரது மணிவார்த்தைகளை கற்றால் சிறந்ததோர் ஒழுக்கமுடைய சமுதாயம் உருவாகும். எனவே தான் பாரதியார் தனது புலவர் வரிசையில்

''யாமறிந்த புலவரிலே
கம்பனை போல் வள்ளுவன் போல்'' என வள்ளுவரையும் வைத்துப் பாடியுள்ளார். திருக்குறளை நோக்கும் போது

''வள்ளுவருக்கு நிகர் வள்ளுவரே'' என்றே கூறத் தோன்றும்

''எப்பொருள் யார்யார் வாய்க் கேட்டினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு''

— நன்றி —

செல்வி. பி. விஜயராணி
ஆண்டு - 9


*With Best Compliments From*

SOORYA'S
*GOLD*

SOVEREIGN GOLD JEWELLERS

*37, Kotugodella Veediya,*
*KANDY.*

# சூரியன்

சூரியன் உயிர்வாழ்வுக்கு மிகவும் முக்கியமானதொன்று சூரியனை யாரும் அணுக முடியாது. ஆனாலும் சூரியனைப் பற்றிய பல தகவல்களை அறிஞர்கள் எமக்குத் தந்துள்ளார்கள். அவற்றில் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

- சூரியனின் குறுக்களவு 865,000 மைல்கள்
- சூரியன் பூமியைப்போல 1300,000 மடங்கு பெரியது.
- சூரியனின் மத்தியில் அதன் வெப்பம் 30 000 000F°, மேற்பரப்பில் 11000°F. சூரியனைச் சுற்றியுள்ள கொரோனா என்ற பகுதியில் வெப்பம் 1 000 000 F° ஆகும்
- சூரியன் பூமியைப் போல 330 000 மடங்கு கனமுடையது
- சூரியனின் மேற்பரப்பில் இருந்து எரியும் தீ "பிரோமிநன்ஸ்" (Prominences) என்று பெயர்.
- சூரியன் 95 சதவீதம் ஜலவாயுவாலும் ஹீலியத்தினாலும் ஆக்கப்பட்டது.
- சூரியன் வெளிவிடும் சக்தியில் 2 000 000 000 இல் ஒரு பங்குதான் பூமியை வந்தடைகிறது.
- சூரியனிலிருந்து பூமி உத்தேசமாக 93 மில்லியன் மைல்கள் தூரத்தில் இருக்கிறது
- சூரியனிலிருந்து ஒளி பூமியை வந்தடைய எடுக்கும் நேரம் 8 நிமிடம் 20 செக்கன்
- சூரியனின் உத்தேச வயது 6 மில்லியன் வருடங்களாகும்

தொகுப்பு

செல்வன். சரவணபவாநந்தன்
ஆண்டு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

REXYCO

No. 99/01, Trincomalee Street,
KANDY.

*With best compliments from:*

**Aruna Traders**

No. 99/01, D. S. S. Veediya,
KANDY.

*With best compliments from:*

**UNION CHEMISTS**

No. 99/01, Trincomalle Street,
KANDY.

*With best compliments from:*

*V. JEYAKUMAR*
*[ Old Boy ]*

**Jay Vee Associates**

No. 99/02, D. S. S. Veediya,
KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *Why I like Social Studies*

*My Favourite subject is social studies. Social studies consists two sections, History and Geography are they. History is divided into two parts world history and Sri Lankan history. Geography is also subdivided into world geography and Sri Lankan geography. In world history we learn all the glorious civilizations that existed long ago We also learn about wars and battles like the Napoleanic wars and the American civil war. We learn about the ancient Greeks and Romans and what they did.*

*I have many reasons for liking social studies. One is that we learn all about the world and what is around us. We learn about what happend long ago and how people lived at that time. For instance, we learn about the Greeks. Sri Lankan history is where we learn about the history of our own country; the kings who ruled and how they defended Sri Lanka at the time of war. I also like map - making. I love to mark the endless lists of towns and cities on a map of the world. Even when I was small, if my sister left a map of Sri Lanka on a table, I would slowly try to draw it.*

*Sri Lankan history is my favourite section of social studies. Because we learn about wars and battles. I like to listen to our subject teacher telling stories about the weapons that the ancient soldiers used to Fight with Another reason for my liking geography is that we learn about crops and how they are cultivated.*

*I think social studies is a very useful subject. I hope to continue studying this subject for a long time.*

*MISS. A. ANUSHAKUMARI*
*Year - 9*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# SILVER KROWN HARDWARE

IMPORTERS GENERAL HARDWARE MERCHANTS AND GOVERNMENT CORPORATION SUPPLIERS.

**23, Abdul Jabbar Mawatha**
**COLOMBO - 12.**
SRI LANKA.

☎ 431419 23712
Residence: 437593

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY HOBBY

— ★ —

Every pupil should have on interesting hobby. It will fill his free time profitably. It will also make a pupil active, happy, alert and knowledge.

My hobby is stamp collecting. It is very interesting hobby. My friends, brothers, sisters, parents and sometimes teachers help me in this collection.

I have about five hundred stamps of which more than three hundred are foreign stamps. My penpals too send me stamps. I have neatly fixed them in my album according to its rules.

My parents, teachers, friends and elders encourage in this hobby. I am proud of it.

Master - G. SASIKUMAR
Year - 7

# MY BROTHER

My brothers name is Sudhahar. He is seven years old. He is studying in year one at Thalatu Oya Tamil Maha Vidyalayam. He likes to play with me. He comes to school with me. He can study well. We all like him very much.

MISS. S. A. SUBASHINI
Year - 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments From:

SRI MUTHUMARI STORES

150, Colombo Street,
KANDY.

Phone: 23247

With best compliments from:

LIBERTY HARDWARES

29, Colombo Street,
KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# CARSON HARDWARES

HARDWARE MERCHANTS, ESTATE SUPPLIERS.
AND ELECTRICAL GOODS

**No. 42, Colombo Street,**
**Kandy.**

Telephone: 08-25427

*With best compliments from:*

G. VEERABAHU
Managing Partner.

# NEW IMPEX CHEMICAL CO.

*124, CENTRAL ROAD - COLOMBO 12.*

*Phone: 433676*

Chemicals, Hardware Plantations & Government Suppliers.

# சைவ சமயமும் விஞ்ஞானமும்.

உயிருள்ளவை உயிரற்றவை என பிரித்தறிய இயக்கம் எனும் தொழிற்பாடு பயன் தருகிறது. இயக்கம் உண்டாகும் பொருட்களில் சக்தி உண்டு. சக்தி வேலை செய்யும் ஆற்றலையுடையது. ஆனால் இச் சக்தியை ஆக்கவோ அழிக்கவோ முடியாது என்று 1886 ஆம் ஆண்டில் ஜோன் டால்ற்றனின் விஞ்ஞான ரீதியான அணுக்கொள்கை விளக்கியுள்ளது. எனினும் இச்சக்தியானது பல்வேறு சக்தி மாற்றங்களுக்குள்ளாகின்றது. உலகம் இயங்குகிறது இதனால் உயிரினங்கள் இயங்குவதாக கூறுகின்றார்கள். இவ்வியக்கத்திற்கு காரணம் என்ன? சூரியனில் இருந்து கிடைக்கும் ஒளி வெப்பசக்திகள் உலகின் எல்லா இடத்துக்கும் சமமாகப் பரவியிருக்க வேண்டாமா? இத்தகைய ஒரு சமநிலைக்கு உதவுவதே இவ்வுலகின் இயக்கமாகும். தன்னையும் சுற்றி சூரியனையும் சுற்றிவரும் பூமியின் இயக்கத்திற்கு தேவையான சக்தி எங்கிருந்து பெறப்படுகின்றது? இதிலிருந்து பார்க்கும் போது உயிருக்கு உயிராயிருக்கும் இறைவன் எல்லாவற்றையும் இயக்குகின்றான் என்பதில் என்ன வியப்புக்கிடக்கிறது. எனவே தான் ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்று பேசப்படுகிறது. அதனாலன்றோ ஆனந்த நடனமிடும் நடராஜனின் உருவமும் உலகத்து இயக்கம் அனைத்தையும் ஆட்டுவிக்கின்றது.

வலிய காந்தப்புலமொன்றில் சுடத்தி இயங்கும் கணப்பொழுதில் மின் பாய்கிறது. இச்சக்தியை தூண்டிய மின், காந்தம் எனப் படுகிறது. காந்தமாகிய ஆன்மா அண்மித்திருக்கும் வேளையில் இயங்கும் நிலையில் உள்ள ஆனந்த நடராஜனின் ஒரு வகையான மின் சக்தி தூண்டப் படுகிறது. இதுவே எமையெல்லாம் ஈர்த்து நிற்கும் இயங்க வைக்கும் சக்தியாகும். ஆடி அடங்கவும் வைக்கிறது. அதிரும் அல்லது இயங்கும் பொருட்களிலே தான் ஒளி பிறக்கிறது. இவ்வொலியானது தொனி. இயல்பு, சுருதி, அதிர்வென் ஆகியவற்றை உள்ளடக்கியபோது இசை ஒலியாக எழுந்து எம்மை இன்பத்திலாழ்த்துகிறது. இவ்வாறே இயங்கிக் கொண்டிருக்கின்ற எம்மிறைவனின் திரு நடனத்திலும் இவ்வகை இன்ப இசை எழுந்து மெய்யுணரச் செய்கிறது. அதனால் அன்றோ மாணிக்க வாசகரும் ''கூத்தன் தன்கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளியவாறு எனக்கு யார் அருள்வார்'' என்று பாடினார். இன்று இயற்கைச் சமநிலை குழம்பித் தவிக்கும் இவ்விழி நிலைக்கு யார் காரணம்? மனிதனின் தலையீடும், கட்டுப்பாடற்ற முறையில் இயற்கையைச் சுரண்டித் தன் சுகபோகத்திற்காக அவற்றை அநாகரிகமான முறையில் பயன்படுத்தியமையுமே பிரதான காரணமாகும். இவ்வாறான சுரண்டலுக்கு அதிக சனப்பெருக்கமும், வாழ்க்கைத்தர உயர்வும், தொழில் நுட்ப அபிவிருத்தியுமே கருப்பொருள்களாகும்

உலக சனத்தொகைப் பெருக்கம், இறப்பு வீதம் குறைதல், பிறப்பு வீதம் கூடுதல் ஆகிய காரணிகளால் வளர்ந்து நிற்கிறது. இவ்விரு காரணிகளுக்குமிடையே ஒரு சமநிலை பேணப்பட்டாலொழிய இயற்கை குழம்பி இன்னலுற நேரிடும். எனவே தான் நடரரஜன் நடன சொரூபத்தில் மேலே தூக்கிய வலக்கரத்திலமைந்த உடுக்கை பிறப்பின் ஒலியையும், மேலே தூக்கிய இடது கரத்தின் நெருப்பு முடிவில் நேரிடும் அழிவையும் உணர்த்துகிறது. இவை இரண்டும் சமநிலையில் பேணுமாப்போல் நோக்கி இரு புறமும் தூக்கியுள்ள இக்கரங்கள் போதித்து நிற்கின்றன. ஆக்கி அழிக்கும் அருந்தொழில்கள் இவற்றைத் தான் உணர்த்தி நிற்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மாத்திரமா? இரண்டாவது வலக்கரம் அபயத்தையும் அதாவது இறைவனை நம்பியோருக்கு துன்பமில்லை எனவும், தூக்கிய இடது கரம் திருவடியாகிய பாதத்தையும் காட்டி நிற்பது இறைவனை வழிபட்டால் மாயையிலிருந்து விடுபட்டு மேலே உயர்ந்து செல்ல வாய்ப்புண்டு என்பதையும் கூறாமற் கூறி நிற்கின்றன. ஊன்றிய காலின் கீழ் அமுத்தப்படும் அரக்கனை காட்டுவது தீய சக்திகளை அடக்கி வெல்ல வேண்டு மென்பதையும், தூக்கிய திருவடி மோட்சத்தையும் இவ்வேறுபட்ட இன்னோரன்ன தத்துவத்தினை விளக்கி நிற்பதே நடராஜனின் ஆனந்த நடனமாகும்.

''அணுவைப் பிரிக்க முடியாது'' என்ற கொள்கையை பிரித்து அவற்றின் ஆக்கக் கூறுகளை அக்குவேறு ஆணிவேராய் பிரித்துக் காட்டினர் பின்னைய விஞ்ஞானிகள். அவ்வாறு பிரிக்கப்பட்ட கூறுகளில் திணிவிற் கூடியவை நியூத்திரன், புரோத்திரன் ஆனால் அணுவின் கருப்பொருளில் திணிவு குறைந்த இலத்திரன் கருவைச் சுற்றி வெவ்வேறு சக்தி மட்டங்களில் ஞாயிற்றுத் தொகுதி போல இயங்கிக் கொண்டே இருக்கிறது. இலத்திரன்களின் இயக்கத்திற்கு காரணம் கூற கஷ்டப்பட்ட விஞ்ஞானிகளுக்கு நடராஜரின் நடன திருவுருவம் இயக்கம் பற்றி எளிதாக எடுத்துக் கூறுகிறதல்லவா? அதனால் அன்றோ ''அணுவில் ஆடுகின்றான் அம்பலக் கூத்தன்'' என்றார் பெரியார் ஒருவர் கருவைச் சுற்றி இயங்கும் இலத்திரனை எங்குள்ளதென்று திடமாகக் கூறமுடியாது. அது அணுவில் ஆரையில் எங்கும் வியாபித்திருக்கக் கூடியது. அச் செயற்பாடு உணர்த்துவது இறைவன் எங்கும் நிறைந்தவர் என்பதே இதற்கு ஆதாரமாக திருவருட்பயனில் செம்மையாக உமாபதி சிவாச்சாரியார் கூறுகிறார்.

''எங்கும் எவையும் எரியுறு நீர் போல்
ஏகம் தங்குமவன் தானே தனி''

செல்வி. சோ. சிவகலா
ஆண்டு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**Champion Traders**

No. 307, Old Moor Street,
COLOMBO - 12.

Phone: 21893,

*With best compliments from:*

**ARUNA TAILORS**

No. 69 C, Main Street,
TALATUOYA.

*With best compliments from:*

**THANALUXMI & CO.**

No. 01, Marassana Road,
TALATUOYA.

*With best compliments from:*

**LAKNILLA**

Technical Product and Services Institue

115, Moragolla Road,
TALATUOYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுதாய வளர்ச்சிக்கு

## இளைஞர்களின் பங்கு

ஒரு சமுதாயத்தை நாம் எடுத்து நோக்கினால் அச்சமுதாயத்தில் பல இனத்தவர், பல மதத்தவர், பல மொழியினர், இளைஞர், முதியோர், சிறுவர் என எத்தனையோ வகையானவர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவருக்குமே நாட்டுப்பற்றும் சில கடமைகளும் உரிமைகளும் இருத்தல் அவசியம்.

ஒரு சமுதாய மக்களாக இருப்பவர்கள் ஒரு நாட்டை ஊக்குவிக்குமுகமாகவே என்றும் செயற்பட வேண்டும். பல்லினத்தவரும் ஒன்று சேர்ந்து உழைத்தாலேயே ஒரு நாடு முன்னேற்றமடையும். எமது நாட்டு மக்களையும் நாட்டையும் நோக்கும் போது இங்கே சிங்களவர், சோனகர், தமிழர், பறங்கியர் என வாழும் அனைவரும் நம்நாடு நம்தேசம் என்ற நாட்டுப் பற்றுடையவராய் ஒன்று பட்டு உழைத்தாலேயே நாமும், நாடும் முன்னேறலாம் என்பது எமக்கு புலனாகின்றது.

இவ்வாறான நாட்டுப்பற்றுடனும், சுறுசுறுப்புடனும் இயங்கக் கூடிய சமுதாயம் என்றால் எந்த ஒரு நாட்டையும் பொறுத்தவரையில் அது இளைஞர் சமுதாயம் ஒன்றே. இளைஞரின் பங்களிப்பும், விவேகமும், வேகமுமே நாட்டின் விரைவான அபிவிருத்தி முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். எமது நாட்டுப் பண்பின்படி யுவதிகளின் பங்களிப்பு மிகவும் குறைவு என்றே கூறலாம். எனவே அவ்வாறின்றி நாட்டின் முன்னேற்றம் கருதியவர்களும் ஆண்களுடன் சேர்ந்து தம்மாலான ஒத்துழைப்பை வழங்குதல் முக்கியமானது என்பதையே வலியுறுத்தப்படுகிறது.

மாணவர்கள் மத்தியிலே கல்வியறிவையும் அதற்கான வசதிகளையும் செய்து கொடுப்பதன் மூலம் அறிவைப் பெருக்குவதோடு. சிறந்த நாட்டுப்பற்றுள்ள பிரஜைகளையும் உருவாக்கலாம் என்பதிலிருந்து நாட்டின் அபிவிருத்திக்கு கல்வியின் பங்களிப்பு எவ்வளவு உயர்ந்தது என்பது இதிலிருந்து புரியக் கூடியதாய் இருக்கின்றது. எனவே தான்

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழிக்கமைய இளமையில் கற்ற கல்வியை கொண்டே எமது சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற கூற்றை பெரியோர்கள் கூறுகின்றார்கள். எனவே இளமையில் நல்ல பழக்க வழக்கம் பண்பு, நாட்டுப்பற்று என்பவற்றை வளர்க்க வேண்டும். இன்றைய காலகட்டத்திலே கல்வியே கூடிய சக்திவளமாக இருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. நவீன விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக தொழில் நுட்பம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. எனவே தொழில் நுட்ப சாதனங்களை இயக்கத் தேவையான கல்வியறிவு இல்லையேல் எதனையும் செய்ய முடியாது. எனவே விஞ்ஞான அறிவும் நாட்டின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. நம் நாட்டைப் பொறுத்த வரையில் பல நுணுக்கமான விஞ்ஞான ரீதியான அபிவிருத்தி வேலைகள் நடந்த போதிலும் அதற்கான முழுப் பங்களிப்பையும் நம்மவர் ஏற்கவில்லை என்பதே உண்மை.

பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு வெளிநாட்டவரின் அறிவையும் ஆற்றலையுமே நம்பி செயற்படுகின்றன. எனவே வெளிநாட்டவர் உதவியின்றி இவற்றை நாமே செய்ய முயற்சிக்க வேண்டும். நமக்குள் அறிவாளிகள் உருவாக வேண்டும். இளம் வயதில் எதைச் சொன்னாலும் நன்றாக நினைவிருக்கும் இவ்வயதை "பசுமரத்து ஆணி" என ஒப்பிடுவார்கள். எனவே இவ்வயதிலேயே படிப்பதிலும் நாட்டுக்கு உழைப்பதிலும் ஈடுபடுவது நல்லது. இளைஞர்களின் துடிப்பால் மட்டும் நாடு முன்னேற்றமடைய முடியுமா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன? அதற்கு முற்று முழுதான ஒத்துழைப்பை ஆளும் அரசாங்கம் செய்து தரல் வேண்டும். அதற்காகவே மக்களுக்கு பலவிதமான உரிமைகளை வழங்கியுள்ளது. பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் விரும்பிய மதத்தைத் தழுவும் சுதந்திரம் சொத்துக்களைச் சேகரிக்கவுமான உரிமைகளை அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ்வுரிமைகள் காரணமாகவே மக்கள் தமது விருப்பப்படி விரும்பிய மொழி பேசி, விரும்பிய இடத்தில் விரும்பிய மதத்தை தழுவி சுதந்திரமாக வாழ பழகிக் கொண்டார்கள்.

இதனாலேயே எமது நாட்டிலும் உள்ள மக்களுக்கும் சுதந்திரத்தைக் கொடுத்ததிலிருந்து ஒரு நிலையான அரசாங்கத்தை உருவாக்கித் தமக்கான சுதந்திர வாழ்க்கையையும் அமைத்துக்கொள்ள மக்கள் பழகினார்கள். இதன் பின்பே தமது நாடு என்ற நாட்டுப் பற்றுடன் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். மக்கள் இல்லாவிட்டால் அரசாங்கம் இல்லை என்பதை உணர்ந்து அரசாங்கமும் மக்களுக்குப் பலவகையான மனித உரிமைகளையும் வழங்கியது. மக்கள் தமது உரிமைகளைக் கைக்கொண்டு பலவகையான கடமைகளையும் செய்தார்கள். தாம் செய்ய வேண்டிய கடமை என்னவென்று தெரிந்து கொண்டார்கள். அவரவர் மொழி மதங்களாகத் தழுவி ஒற்றுமையாக மத, மொழி வளர்ச்சிக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் உதவினார்கள்.

எனவே மதமும், மொழியும் வளர்ச்சியடையும் போது இறைவழிபாடு காரணமாக ஒரு மனிதன் நற்பண்புகளையுடைய நல்ல பிரஜையாகின்றான். மொழியறிவின் காரணமாக சிறந்த அறிவையுடையவனாகின்றான். இதனால் எதையும் சிந்தித்து செயல்படும் திறன் மக்களிடையே அதிகரிப்பதனால் இவற்றையே நாட்டின் வளர்ச்சிக்கான மூலப் பொருள்களாகக் கொண்டு அரசாங்கம் இயங்கும் போது நாடு முன்னேற்றமடைகிறது எனலாம். ஆகையினால் ஓர் பல்லின சமுதாயத்தில் வாலிபப் பருவமும் மனித உரிமைகளும் இருப்பதனால் நாடு முன்னேறவும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் வாய்ப்பு ஏற்படுகின்றது எனலாம் என்ற அபிப்பிராயத்தை நம் மக்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

"நாடு உனக்கு என்ன செய்தது என்பதிலும்
நாட்டுக்கு நீ என்ன செய்தாய் என்று சிந்திப்பதே மேல்"

செல்வி. சுமதி துரைசாமி
ஆண்டு - 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழா சிறப்புற எம் நல்வாழ்த்துக்கள்!

# ரத்ன மாளிகை

(ஜுவலர்ஸ், நகை அடவு பிடிப்போர்)

- அசல் 22 Kt. தங்க நகைகளுக்கும்
- ஆடர்கள் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கும்

சிறந்த நகை மாளிகை.

இல. 48, 50, திருகோணமலை வீதி,
கண்டி.

தொலைபேசி: 23630

With best compliments from:

## MANIKKAM STORES

*No. 69 B, Main Street,*

*TALATUOYA.*

With best compliments from:

## COMMERCIAL HARDWARE STORES

65 & 67, Colombo Street,

KANDY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி

" மண்ணிலங்கு மலையிலங்கு வளமிலங்கு நாடு
வானவரும் விரும்பு மெங்கள் மணியிலங்கை நாடு"

என இலங்கை வளம் பேசிப் பெருமை கொள்கின்றோம். அத்தகைய வளமார்ந்த நம் நாட்டில் பொருளாதாரப் பிரச்சனையென்றால் புதுமையாக இருக்கின்றதல்லவா? வரலாற்று ஏடுகளைப் புரட்டினால் 'நீருயர நெல் லுயர்ந்து' ஏற்றுமதியும் செய்தது எனச் சான்றுகள் பல கிடைக்கின்றன. பற்றாக்குறை என்ற வார்த்தைக்கே இடமில்லை தன்னிறைவு என்ற நிறைவினால் பொருளாதாரம் வளம் பெற்றிருந்தது. உணவுக்காக, உடைக்காக அந்நியர் கையை எதிர் நோக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அந்நியர் வருகையினால் எமது நாட்டின் தன்னிறைவுப் பொருளாதாரம் நிலைகுலைந்து, நிறைவற்றதாகிவிட்டது. இலங்கையின் நீர்ப்பாசனத் திட்டங்கள் எல்லாம் கவனிப்பாரற்றுப் பாழடைந்தன. இலங்கையிலிருந்து வருமானம் பெறுவதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டனர். இவ்வேளை தமக்கு இலாபந் தரக் கூடிய பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகப்படுத்தினர். இதனால் இலங்கையின் அடிப்படை விவசாயம் தடம் புரண்டது பொருளாதாரம் ஆட்டம் கண்டது. அடிக்கடி தளம்பல் நிலை ஏற்பட்டது. பற்றாக்குறையும், இறக்குமதியும் முக்கிய ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டது. ஏற்றுமதி வருமானம் குறைந்தது இறக்குமதிச் செலவு கூடியது. ஐரோப்பியர் எமது விலை பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி தமது நாட்டு உற்பத்திப் பொருட்களைக் கூடிய விலைக்கு விற்றனர். பெருந்தோட்டங்களில் வேலை செய்தோருக்குச் சம்பளம் வழங்கினர். தென்னிந்திய கூலிகள் தருவிக்கப்பட்டனர். சுதேசிகள் விவசாயத்தை நாடிச் செல்ல இக்கால கட்டத்தில் இலங்கைப் பொருளாதாரம் இரட்டைத்தன்மை கொண்டதாய் இருவேறு திக்குகளை நோக்கிச் செல்லத் தொடங்கியது. இவ்வாறு ஒன்றரை நூற்றாண்டு காலம் இயங்கிய பொருளாதாரம் சுதேசிகளது ஆட்சியில் அபிவிருத்திப்பாதை நோக்கிச் செலுத்தப்பட்டது இலங்கையர் ஆட்சி உரிமை பெற்று முன்னேற்றம் கருதிச் செய்யப்பட்டவை எல்லாம் பொருளாதார அபிவிருத்தி என்ற போர்வைக்குள் முடக்கப்பட்டது. கோப்பி, தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய பயிர்களுடன் வாசனைத் திரவியங்களும் பயிரிடப்பட்டன அவற்றால் பெறப்பட்ட வருமானம் எமது செலவினை ஈடு செய்வதாக இல்லை. எனவே தான் கடன்காரராகிவிட்டோம். இலங்கையின் பொருளாதாரம் கடன் சுமையைத் தாங்கி நடந்து செல்லும் வேளை பல உலக நாடுகளோடு கலந்தாலோசித்து பொருளாதாரத்தின் வளத்தைப் பெருக்க அபிவிருத்தித் திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. உலக நாடுகளிடம் மட்டுமல்லாது உலக வங்கி போன்ற தாபனங்களிடமும் கடன் பெறுகின்றது. மகாவலித்திட்டம், கல்லோயாத் திட்டம், வளவகங்கைத் திட்டம், போன்றன யாவும் அபிவிருத்தி முயற்சிகளே. இதனால் விவசாயம் விருத்தி செய்யப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படலாம், தரிசாக வெறுமனே விடப்பட்ட நிலங்கள் பயிர் செய்கைக்குட்படுத்தப்படும், மின் சக்தி பெறப்படும். குடியேற்றத் திட்டங்கள் மூலம் வீடு வசதி. செய்து கொடுக்கப்படும் வேலையற்றோர் பிரச்சனையும் தீர்க்கப்படும் இவ்வாறு எம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு பொருளாதாரம் கட்டுக்கோப்புள்ளதாக அமைக்கப்பட்டால் நம் நாடு முன்னேறும்.

இனி வரலாற்று ரீதியாக எமது பொருளாதாரம் திசை திருப்பப்பட்டமையும் உலகச் சந்தையில் ஏற்பட்ட விலைத்தளம்பல்கள் அதனைப் பாதித்தமையால் சுயதேவைப் பூர்த்தி பின்நோக்கித் தள்ளப்பட்டது. தன்னிறைவு என்பதே அற்றுப் போய் விட்டது. இன்னுமொரு முக்கிய காரணம் குடிசனப் பெருக்கம் பெருகி வரும் சனத்தொகையின் தேவைகள் பூர்த்தி செய்வது பற்றாக்குறையாக இருந்தது படித்தவர்கள் தொகை கூடக் கூட தொழிற் பிரச்சனை முக்கியமாக வேலையற்றோர் படையும் உருவாயிற்று. சுகாதார வசதிகள் பெருக, இறப்பு வீதம் குறைந்தது பிறப்பு வீதம் கூடியது.

ஆட்சியாளர்களினால் அபிவிருத்தியடைந்த நாடுகளிடம் உதவிகள் கோரப்பட்டன விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நம்நாடு வளர்ந்து வரும் பொருளாதாரத்தை அதாவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வகையைச் சேர்ந்ததாயிருந்தது. எனவே இலங்கையின் பொருளாதாரம் அபிவிருத்திப்பாதையை நோக்கி வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது. விரைவில் என்றோ ஒரு நாள் தன்னிறைவு கண்டு பூரண திருப்தியுடன் இயங்குமென்பதில் ஐயமில்லை.

- வணக்கம் -

செல்வன். லோ. சிவகாந்தன்
ஆண்டு - 11

*With best compliments from:*

**MODERN HARDWARE CENTRE**

GENERAL HARDWARE MERCHANTS

*43, Abdul Jabbar Mawatha,*

*COLOMBO - 12*

SRI LANKA.

T'phone: 435468, 28614, 436537 Fax: 431890

*With best compliments from:*

**M/s. ORIENTAL ENTERPRISE**

Leading Importers of Quality Hardware Items.

*325 A, Old Moor Street,*

*COLOMBO - 12.*

TEL: 431882 & 433202

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்.........

1. நியான் வாயுவில் மின்சாரம் பாய்வதால் குழல் விளக்கு *(Tube Light)* பிரகாசமாக எரிகிறது.
2. கண்ணாடி தயாரிக்கத் தேவையான பொருட்கள் மணல், பொட்டாஷ், போராக்ஸ், என்பனவாகும்
3. தண்ணீரில் உள்ள வாயுக்கள் ஐதரசனும், ஒட்சி-சனுமாகும்.
4. இதய மாற்றுச் சிகிச்சை செய்து புகழ் பெற்ற தென் ஆபிரிக்க டாக்டர் புரொபசர் கிருஸ்டியன் *N.* பர்னா-டோ.
5. உலகிலேயே மிக அதிகமாக கிடைக்கும் உலோகம் அலுமினியம்
6. நில நடுக்கத்தைப் (பூமி அதிர்ச்சி) பதிவுசெய்யும் இயந்திரத்தின் பெயர் சீஸ் மோகிராஃப் *(Seismograph)*
7. வைரக்கல்லை *1400°F* முதல் *1600°F* வரை சூடாக்கினால் எரியும்.
8. விற்றமின் என்ற பெயரை முதலில் தொடங்கியவர் ஃபங்க் விற்றமின் *(Funk Vitamin)* ஆவார்.
9. பூமியில் ஈலியம் வாயு இருப்பதாக கண்டு பிடித்தவர் வில்லியம் ரம்சே.
10. சந்திரனின் ஒருவகை சக்தியால் கடலில் அலைகள் தோன்றுகின்றன.
11. பாலைவனத்துக்கிடையில் காணப்படும் சோலைக்கு ஓயஸிஸ் என்று பெயர்.
12. நெப்போலியன் பிறந்த இடம் கார்ஸிகா தீவிலுள்ள அஜரஸியோ என்ற ஊர்.
13. 1964 இல் ஒலிம்பிக் பந்தயம் ஜப்பானில் நடைபெற்றது
14. கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடித்த ஆண்டு 1492.
15. வெடிகள், வாணங்கள் செய்யும் கலைக்கு பெயர் பைரோ டெக்னிக் ஆகும்.

செல்வன். க. பாலகுமார்
ஆண்டு – 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**Carmon's Import (Pvt) Limited**

General Hardwares, Sanitarywares & Importers.

57, COLOMBO STREET
KANDY.

T'phone: 23341

*With best compliments from:*

**SEVANA STEEL**

Importers & General Hardware Merchants

5-A, ABDUL JABBAR MAWATHA
COLOMBO - 12.

Tel: 449337

*With best compliments from:*

**NIPPON METAL TRADERS**

General Hardware Merchants & Importers
Corporation & Construction Suppliers.

356, Old Moor Street,
COLOMBO - 12

T'phone: 434752

*With best compliments from:*

**Mahaweli Metals**

Importers
General Hardware Merchants

439 Old Moor Street,
COLOMBO - 12.

Telephone: 433894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் நாட்டில் இன ஒற்றுமையை ஏற்படுத்த வகை புரிவோம்

''பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்
சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையால்''

என்றார்

தெய்வப் புலவர் திருவள்ளுவர். உலகில் மனித இனம் பிறப்பினால் வேற்றுமை காண இயலாது. பிறப்பினால் யாவரும் சமமே. சாதியிரண்டொழிய வேறில்லை என்று சாற்றி விட்டாள் தமிழ் மகளும். மொழி, இனம், மதம், நாடு, நிறம் என்று எம்மிடையே எத்தனை எத்தனையோ வகை, வகையான வேற்றுமைகள். வேற்றுமைகள் பலவகையாகக் காணப் பட்ட போதிலும் நாம் வாழும் நாடோ இலங்கை. எழில் கொழிக்கும் இலங்கையிலே தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் என பல்லின மக்கள் வாழ்கின்றனர். அவர்களால் சிங்களமும், தமிழும், ஆங்கிலமும் மொழிகளாகப் பேசப்படுகின்றன, பயிலப்படுகின்றன. இதனால் ஒற்றுமை எனும் விடிவை நோக்கி விரைய வேண்டியவர்கள் நாங்கள். இலங்கையில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற உணர்வை ஏற்க வேண்டும்; ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் நாட்டின் அபிவிருத்திக்கு ஆவன செய்ய முடியும்.

இற்றைக்கு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்கள் வரலாற்றில் கறைபடிந்த தீயகனவுகள். அவற்றை வரலாற்றிலிருந்து அழிக்க முடியாதாயினும், வருங்காலத்தில் மாற்ற முடியும். ஒற்றுமையை நிலை நாட்டி அவற்றுக்குப் பரிகாரம் தேடமுடியும். பாதிக்கப்பட்ட மக்கட் கூட்டம் ஒரு புறம், பாதிக்கப்பட்ட பண்பாட்டுக் காரணிகள், பார்க்குமிடமெல்லாம் மனித இதயம் படைத்தவர்களின் உள்ளத்தில் வேதனைமிக்க குமுறல்கள் ஒருபுறம். இதனால் அழகுமிக்க ஈழ நாடு அழகிழக்கும் கோரம் இதனை நாட்டுப்பற்று மிக்க எந்தக் குடிமகனாலும் சகித்திருக்க முடியாது. அபிவிருத்தித் திட்டங்களை அடுக்கடுக்காய் முன்வைத்து ஆசையுடன் ஏற்றுச் செயல்பட புரிந்துணர்வு மிக்க சமுதாயமொன்று உருவாக வேண்டும். அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாயினும் இலங்கையான் என்ற உணர்வோடு தொழிற்பட வேண்டும்.

''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து''

என்பதற்கிணங்கக் கற்கும் பள்ளிப் பருவத்திலேயே ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்கிற உணர்வோடும் ஏனைய சமூகத்தவர்களோடு மனத்துவேஷமற்றுப் பழகும் நல்ல மனப்பாங்கினையும் ஏற்படுத்த வேண்டும். அனைத்து இனப் பிள்ளைகளும் இன, மத, மொழி வேறுபாடற்றுக் கல்வியை கற்கக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். வேலைவாய்ப்பும், பதவியுயர்வுகளும் தகுதியுடையோருக்கு வழங்கப்படல் வேண்டும். மழலைச் சொற்கேட்டு மயங்காதார் யாருமில்லை. இங்கு யாருடைய பிள்ளையாயினும் எந்த மத, இன, மொழியைச் சார்ந்திருப்பினும் காட்டும் அன்பு திறந்ததாய் இருந்தால் வேற்றுமைகள் மங்கி மறைந்து விடுகின்றன. இதனால் யாவரும் சமமானவரே என்ற உணர்வு பால்யப்பருவத்திலேயே மனதில் ஏற்படுகின்றது. பலமக்கள் வாழும் கிராமப் புறங்களில் பண்டிகை நாட்களில் பலகார பட்சணங்களைப் பரிமாறிக் கொண்டு பேதமின்றி ஒன்று சேர்ந்து மகிழும் நாட்கள் போல் எல்லா நாட்களும் விளங்க மாட்டாதா என சிந்திக்கத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து இனமக்களுக்கும் கொண்டாட்ட நாளொன்று என ஒருதினம் ஒதுக்கப்பட வேண்டும். இத்தினத்திலே தத்தமது கலை கலாச்சாரப் பண்பாடுகளை வெளிப்படுத்தும் கலைஇலக்கியப் படைப்புகளை வெளியிட்டு பரஸ்பரம், ஒற்றுமை பேணப்பட்டு மூடத்தனமான எண்ணங்களை ஒழிக்க வேண்டும்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்ததுவே''

என்ற உணர்வோடு பாரம் பரியம் பேணி அபிவிருத்தி நோக்குடன் இனப்பூசல்களை மாய்வித்து சுபீட்சமுடன் வாழ்வோம். எல்லோரும் சகோதரர் போல் ஒருதாய் மக்கள் போல் ஒற்றுமையைப் பேணுவோம்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''

நன்றி.

செல்வன். சோ. சுரேஷ்
ஆண்டு - 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**BOBBY**
**Trade Centre**

No. 56, Kotugodella Veediya,

KANDY.

*With best compliments from:*

M. PUSHPARAJ
***LANKA METALS***

*L M*

லங்கா மெட்டல்ஸ் ලංකා මෙටෙල්ස්

Dealers in Eeversilver
(Wholesale & Retail)

P-226/8, Sri Kathiresan Street,
COLOMBO - 12.

*With best compliments from:*

**GLORY TEXTILES AND GROCERIES**

(CITY MISSION BUILDING)

Dealers in Groceries

No. 125, D. S. Senanayeka Veediya,
KANDY.

T'phone: 23979

*With best compliments from:*

*V. K. M. Nagalingam & Sons*

Jewellers, Radio, TV Dealers

97, COLOMBO STREET
KANDY.

Phone: 23108

**Famous over 87 years for**
**Quality Jewellery**

Where Trust Tradition


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# S. SIVAKUMAR

126, Barber Street,
COLOMBO - 12.

*With best compliments from:*

# Globe Hardware

No. 170B, Colombo Street,
KANDY.

*With best compliments from:*

# MICRO METALS

126, Barber Street,

COLOMBO - 13.

*With best compliments from:*

# N. N. Steel Company

111, Mahavidyalaya Mawatha,
(Barber Street)
COLOMBO - 13.

Importers, Exporters &
Distributors of
Steel, Cement &
General Hardware.

Tele: 448954

Agent for Ceylon Steel Corporation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

## Chithra Jewellers

22 Carat Sovereign Gold Jewellers

41, D. S. Senanayake Veediya,
KANDY. Phone: 08-23290

චිත්‍රා ජුවලර්ස් ★ சித்ரா ஜுவலர்ஸ்
41, ඩී. එස්. සේනානායක වීදිය - මහනුවර

*With best compliments from:*

## Standard Steel Centre

Imp?rters & General Hardware Merchants

**No. 303, Old Moor Street,**
**COLOMBO - 12.**
Phone: 23151

*With best compliments from:*

## GEMRICH
**VIDEO CENTRE**

Quality Video Cassettes
Video Filming - Recording
Audio Cassettes

65, KOTUGODELLA VEEDIYA,
KANDY.
Dial: 08-22588

*With best compliments from:*

*P. SHANMUGARAJAH*

## Deepa Jeweeleers Mart

**Visvakarma Gold Manufacturing**

192, Upstair, Sea Street,
**COLOMBO - 11**
(Opposite Vinayagar Temple)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# SINDU

## *Jewellery*

*173/2A, SEA STREET*

(UPSTAIR KINGSLEY TRADING CO.)

*COLOMBO - 11.*

**With best compliments from:**

KANDY MEDICALS

*No. 96, D. S. S. Veediya*

*KANDY.*

**With best compliments from:**

*M. Balakrishnan*

(Old Boy)

**NAWALANKA TRADING & Co.**

MURALIWATTA

GURUDENIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தாய் வாழ்த்து

—★—

இராகம்:- சாருமதி
தாளம்:- ரூபகம்

பல்லவி

கமழ வேண்டும் தாயே காலத்தை வென்று நீயே
மணங் கமழ வேண்டும்.

அனுபல்லவி

அருளும் பொருளும் செறிந்து வாழ
அகமும் புறமும் மகிழ்ந்து வாழ (கமழ வேண்டும்)

சரணம்

புவியில் நின் புகழ் புத்தொளி வீசவும்
புத்தம் புதியன கலைகள் செழிக்கவும்
அரிய துறைகளில் ஆக்கம் கொழிக்கவும்
அன்னை தமிழினை அகிலம் துதிக்கவும்
(கமழ...........

எளிதில் நினது துயர்கள் அகலவும்
எங்கும் தமிழர்கள் இன்புற்று ஏறவும்
புதிய ஆராய்ச்சித் துறைகள் பெருகவும்
பூரித்து முத்தமிழ் எங்கும் முழங்கவும்
(கமழ வேண்டும்...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

*G. Mohanaraj*
*(Proprietor)*

# NEW COLOMBO EGG CENTRE

GENERAL EGG MERCHANT

**28/1, Barber Street,**
**COLOMBO - 13.**

☎ 438662

# KALA POULTRY FARM

*NICKATENNE - TALATUOYA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

**Kandyan**
**Trading Corporation**

93, D. S. Senanayaka Veediya,
KANDY.

*With best compliments from:*

**Wijayasiri Stores**
Estd. 1958

368, OLD MOOR STREET
COLOMBO - 12.

Phone: 433230

*With best compliments from;*

**Imperial Hardware Stores**

No. 74-A, Castle Hill Street,
KANDY.

T'phone: 08 - 23822

*With best compliments from;*

*ALCAN STEEL*

341-B, OLD MOOR STREET,
COLOMBO - 12.

Phone: 440962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது மனமார்ந்த நன்றிகள்............

★ எமதினிய 'முயற்சி நிறைவேற அருள் புரிந்த இறைவனுக்கும்,

★ எமது கலைவிழா இனிது நிறைவெய்தும் பொருட்டு நல்லாசிகள் வழங்கிய பெரியோர்களுக்கும்,

★ எமது வேண்டுகோளை ஏற்றுத் தமது பொன்னான நேரத்தையும் பொருட்படுத்தாது எமது கலைவிழாவைச் சிறப்பித்த பிரதம விருந்தினருக்கும், கௌரவ விருந்தினர்களுக்கும்,

★ இக்கலைவிழாவைச் சிறப்பிப்பதற்கு எமக்கு எல்லா வழிகளிலும் உதவியும் ஊக்கமும் அளித்த அதிபருக்கும்,

★ எமக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், நண்பர்களுக்கும்,

★ முகங்கோணாது மனநிறைவுடன் விளம்பரம் தந்துதவிய விளம்பரதாரர்களுக்கும்,

★ அச்சு, வேலைகளைக் குறுகிய காலத்திற் குறைந்த செலவில் செய்துதவிய நாவலப்பிட்டி மிட்லன்ட் அச்சகத்தாருக்கும்,

★ எமது பழைய மாணவர் மன்றத்தை உருவாக்க உறுதுணையாய் இருந்த எமது முன்னாள் அதிபர் திரு. மா. கந்தசாமி அவர்களுக்கும்,

எமது மன்றத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை அர்ப்பணித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

நன்றி!!

நன்றி!!!

இவ்வண்ணம்
**பழைய மாணவர் சங்கம்**
(க/த. ம. வித்தியாலயம்)
தலாத்துஓயா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழா சிறப்புடன் நடைபெற
எமது நல்லாசிகள்!



# ஸ்ரீ முத்துமாரி ஸ்டோர்ஸ்

இல. 88. மெயின் வீதி,

தலாத்துஓயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from:*

# CEYLON STEEL COMPANY

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS.

**332, OLD MOOR STREET**

**COLOMBO - 12**

SRI LANKA.

T'PHONE: 434875, 2'023 CABLE: CEYSTCO

Printed at Midland Printers, 117, Kotmale Road, Nawalapitiya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org